


மெல்லிசை மன்னர் என தமிழ்ச் சமூகத்தால் அன்புடன் அழைக்கப்பட்ட பிரபல இசையமைப்பாளர் எம்எஸ் விஸ்வநாதன் இன்று அதிகாலை 4.15 மணிக்கு மரணமடைந்தார். அவருக்கு வயது 87. மனயங்கத் சுப்ரமணியன் விஸ்வநாதன் என்ற இயற்பெயர் கொண்ட எம்எஸ் விஸ்வநாதன் பாலக்காட்டில் உள்ள எலப்புள்ளி கிராமத்தில் 1928ல் பிறந்தவர். அவரது பெற்றோர் மனயங்கத் சுப்பிரமணியன் நாராயணி குட்டி. நான்கு வயதில் தந்தையை இழந்து வறுமையில் வாடிய எம்எஸ்வி, மிக இளம் வயதிலேயே நாடகக் குழுவில் சேர்ந்தார். நடிக்கவும், பாட்டுப் பாடவுமே அவரது விருப்பமாக இருந்தது. 13 வயதில் திருவனந்தபுரத்தில் தனது முதல் மேடைக் கச்சேரியை நடத்திய எம்எஸ்வி, 1950களில் எஸ்எம் சுப்பையா நாயுடு மற்றும் சிஆர் சுப்பாராமன் ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றினார். 1952ல் சி ஆர் சுப்பாராமன் காலமாகிவிட, அந்த நேரத்தில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த மருமகள், சண்டி ராணி, தேவதால் மற்றும் ஜெனோவா போன்ற படங்களை முடித்துக் கொடுத்தவர் எம்எஸ்விதான். பின்னர் கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன் தயாரித்த பணம் படத்துக்கு இசையமைப் பாளர்களாக எம்எஸ்வியும் டிகே ராமமூர்த்தியும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். எம்எஸ்வி டிகே ராமமூர்த்தி இரட்டை இசையமைப்பாளர்கள் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாக அறிமுகமான படம் பணம்தான். அதன் பின்னர் இந்த இரட்டையர்கள் காலம்தான் தமிழ் சினிமாவில் கொடிகட்டிப் பறந்தது. 1952 லிருந்து 1965 வரை இந்த இருவரும் இணைந்து காலத்தால் மறக்க முடியாத பல காவியப் பாடல்களைப் படைத்தனர். இருவரும் இணைந்து 100க்கும் அதிகமான திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளனர். இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். டிகே ராமமூர்த்தியைப் பிரிந்த பிறகு, தனியாக 700 க்கும் மேற்பட்ட படங்களில் இசையமைத்தார் எம்எஸ் விஸ்வநாதன். கடைசியாக அவர் இசையமைத்த படம் சுவடுகள். தமிழ் தவிர, மலையாளத்தில் 74 படங்களுக்கும், தெலுங்கில் 31 படங்களுக்கும் இசையமைத்துள்ளார் எம்எஸ்வி. கடந்த சில வாரங்களாகவே உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எம்.எஸ்.விஸ்வநாதன் ஜூலை மாதம் 14ம் தேதி அதிகாலை 4.15 மணிக்கு காலமானார். இவர் தென்னிந்திய பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருதும், சிறந்த இசையமைப்பாளருக்கான கேரள அரசு விருதும் பெற்றவர். காலத்தால் அழியாத பல காவியப் பாடல் தந்த எம்எஸ் விஸ்வநாதனின் மனைவி ஜானகி கடந்த 2012ம் ஆண்டு மறைந்தார். எம்எஸ்வி ஜானகி தம்பதிக்கு நான்கு மகன்கள், மூன்று மகள்கள்.

அவருடைய மறைவிற்கு தமிழ் உலகமே திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியது.

# மனசு சஞ்சலப்படுகிறதா?



ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப்பட்டுக் கொண்டிருந்தார். ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார். சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக் கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏரியைக் கடந்து சென்றார்.

ஏரி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப்படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார். ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்று வரப் பணித்தார். நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது . சகதி நீரின் அடியிற்சென்று படிந்திருந்தது.ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான். புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்..?நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா? ஆமாம் சுவாமி! நம் மனமும் அப்படிப் பட்டதுதான்.. மனம் குழப்பத்தில் இருக்கும் போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதை அப்படியே விட்டு விட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும்.

நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம். மனதை சமாதானப்படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**



**மித்ரா டைம்ஸ்**
மாத இதழ்
ஆண்டு-1 ஜூலை-2015 இதழ் -2

*வெளியீட்டாளர்-ஆசிரியர்*
**M.சுந்தரமூர்த்தி**

*இணையாசிரியர்*
**K.பாலகிருஷ்ணன்**

*தலைமை துணையாசிரியர்*
**G.ராம்மோகன்**

*துணையாசிரியர்கள்*
**M.G.சேகர்**
**R.குணசேகர்**

*உதவி ஆசிரியர்கள்*
**B.துரைராஜ்**
*கோவை* **K.விஜயராஜ்**

*தலைமை நிருபர்*
**K.ராதாகிருஷ்ணன்**

*நிருபர்*
*பொள்ளாச்சி* **M.சாகுல் ஹமீது**

*வடிவமைப்பு*
**K.ராஜராஜேஸ்வரி**

*சட்ட ஆலோசகர்*
**V.N.பிரசாத்** M.A.,B.L.,

**அலுவலக முகவரி**
602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 600 094.
போன் : 044-23744661, 23743007
e-mail:mitratimes2015@gmail.com

இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணையாசிரியரே பொறுப்பாவார்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது

# என் எண்ணம்...



-ஆசிரியர்
எம்.எஸ்.மூர்த்தி



# கனவு நகரமா?

# ஸ்மார்ட் சிட்டி

மத்திய அரசின் கனவு திட்டங்களில் ஒன்றான, 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தில், தமிழகத்தின், 12 நகரங்கள் தரம் உயர்த்தப் படுகின்றன. அனைத்து அடிப்படை வசதிகளுடன் முன்மாதிரி நகரங்களாக, தமிழக நகரங்கள் மாற்றப்பட உள்ளன. அதுபோல,'அம்ருட்' எனப்படும், ஏற்கனவே இருக்கும் நகரங்களை புனரமைத்து, அதற்கு புத்துயிர் ஊட்டி மேம்படுத்தும் திட்டப்படி, தமிழகத்திற்கு, 33 நகரங்கள் கிடைத்து உள்ளன.

இன்னும் ஏழாண்டிற்குள், நாடு முழுவதும், 100 ஸ்மார்ட் சிட்டிகள் ஏற்படுத்த, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து செயல்படுகிறது. வெங்கையா நாயுடுவை அமைச்சராக கொண்ட, மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை, 100 ஸ்மார்ட் சிட்டிகள், நாட்டில் எந்தெந்த நகரங்களில் அமைக்கப் பட வேண்டும் என, நீண்ட ஆலோசனைக்கு பின் முடிவு செய்துள்ளது.

அந்த வகையில், நாட்டின் மிகப் பெரிய மாநிலமான, உ.பி.,யில் 13 ஸ்மார்ட் சிட்டிகளும், 54 அம்ருட் மாநிலங்களுக்கு அமைய உள்ளன. அதற்கு அடுத்த படியாக, தமிழகத்திற்கு, 12 ஸ்மார்ட் சிட்டிகளும், 33 அம்ருட் நகரங்களும் கிடைக்க உள்ளன. இந்த இரண்டு நகரங்களுக்கும் அடுத்த படியாக, மகாராஷ்டிராவுக்கு, 10 ஸ்மார்ட் சிட்டிகளும், 37 அம்ருட் நகரங்களும் கிடைக்க உள்ளதாக, மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை



வட்டாரங்கள் தெரிவித்தன. எந்தெந்த நகரங்கள், ஸ்மார்ட் சிட்டிகளாகவும், அம்ருட் நகரங்களாகவும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை, அந்தந்த மாநில அரசுகள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டிகளில், உலகத்தர சாலை வசதி, 24 மணி நேரமும் மின் வசதி, குடிநீர், சுகாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள், மக்கள்தொகை, இயற்கை அமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் அமைக்கப்படும். அதுபோல, தகவல் தொழில்நுட்பம், தொழில் வாய்ப்பிற்கும், இந்த நகரங்களில் அதிக வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

ஸ்மார்ட் சிட்டிகள் புதிதாக உருவாக்கப் படுவதாக இருந்தாலும், முழுவதும் புது நகரங்களாக இல்லாமல், முனிசிபல் நகரங் களும் அவற்றை ஒட்டியுள்ள பகுதிகளும், ஸ்மார்ட் சிட்டிகளாக மேம்படுத்தப்படும் என, மத்திய அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுபோல, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பெயரை நினைவுகூரும் வகையிலான, 'அடல் மிஷன் பார் ரிஜுவனேஷன் அண்ட் அர்பன் டெவலப் மெண்ட் ஸ்கீம்' என்பதன் சுருக்கமான, அம்ருட் திட்டத்தில், ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு, சிறப்பான முறையில், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும். நூறு ஸ்மார்ட் சிட்டிகள் மற்றும் 500 அம்ருட் நகரங்களுக்கான அறிவிப்பை சென்ற மாதம் வெளியிட்ட பிரதமர் நரேந்திர மோடி, அன்றே திட்டத்தையும் துவக்கி வைத்து உள்ளார்.

முதலில் அமைக்கப்பட உள்ள, 100 ஸ்மார்ட் சிட்டிகளில், நடப்பு, 2015-16ம் நிதியாண்டில், 20 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த நகரங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்கும்.அடுத்த, 2016 17ம் நிதியாண்டில், 40 நகரங்களும், அதற்கு அடுத்த நிதியாண்டில், மீதமுள்ள, 40 நகரங்களும் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கும். அதுபோல, அம்ருட் நகரங்களைப் பொறுத்தமட்டில், மலைப்பகுதி நகரங்கள், தீவு நகரங்கள், சுற்றுலா வாய்ப்பு அதிகமுள்ள நகரங்கள், கங்கை நதிக்கரை நகரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படும்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்தியா முழுவதும் 100 ஸ்மார்ட் சிட்டி எனப்படும் உலக தரத்திலான நகரங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இந்தியப் பொருளாதாரம் மேலும் வளர்ச்சி அடையும் என்பது அரசின் எதிர்பார்ப்பு.


அதற்கேற்ப ஸ்மார்ட் சிட்டி உருவாக்கத்தின் முதற்கட்ட பணிகளும் நடந்து வருகின்றன. தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில் உள்ள பொன்னேரி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை ஸ்மார்ட் சிட்டி அமைய உள்ள பகுதியாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான வேலை களும் நடந்து வருகின்றன.

இந்த ஸ்மார்ட் சிட்டி உருவாக்கம் குறித்து இந்திய தொழிலகக் கூட்டமைப்பு சார்பில் (சிஐஐ) சென்னையில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மத்திய நகர்ப்புற மேம்பாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு கலந்து கொண்டார்.

அப்போது பொன்னேரி ஸ்மார்ட் சிட்டி உருவாக்கத்தில் ஜப்பான் நிறுவனங் கள் ஆர்வம் காட்டி வருவதாகவும், முதற் கட்ட பணிகள் நடந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

பிற மாநிலங்களை விடவும் தமிழ் நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி மிகச் சிறப்பாக உள்ளது. மக்களின் வாழ்க்கை நன்றாகவே இருக்கிறது என்று கூறிய அமைச்சர், ஸ்மார்ட் சிட்டி திட்டமும் பிற மாநிலங்களை விட தமிழகத்தில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன் என்றார். மேலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் முழு பொறுப்பும் மத்திய அரசிடம் வைத்துக் கொள்ளாமல், மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பும் பெறப்படும் என்றார்.

நாடு முழுவதும் 500 நகரங்களை ஸ்மார்ட் சிட்டியாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஸ்மார்ட் சிட்டியாக தேர்வு செய்யப்படும் நகரத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, தண்ணீர், மின்சாரம், கழிவுநீர் மேலாண்மை, ஆரோக்கியமான கல்வி, இயற்கை வளங்களை பொறுப்பாக பயன்படுத்துவது, மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது, நிதிசேவை மையங்கள், வர்த்தக மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதிபடுத்துவது, முதலீடுகளை ஈர்ப்பது போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.




ஸ்மார்ட் சிட்டி அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள பகுதியின் வருவாய், சுகாதார நிலை, இயற்கை வளம், மின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வசதி, தொழில் அமைப்பதற்கான சாத்திய கூறுகள், தொழில்நுட்ப வசதிகள் மற்றும் மனித ஆற்றல் போன்றவை, கடன் வழங்கினால் திருப்பி செலுத்தும் தகுதி போன்றவை குறித்து முதலில் ஆய்வு செய்யப்பட உள்ளது.

இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் அமைய உள்ள ஸ்மார்ட் சிட்டியை அமைக்க, உலகின் பல நாடுகளும் தயாராக உள்ளன. பொன்னேரியில் அமைய உள்ள ஸ்மார்ட் சிட்டி உருவாக்கத்தில் ஜப்பான் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கான முதற்கட்ட ஆய்வு வேலைகளை வேகமாக நடந்து ஜப்பான் அரசுடன் (Japan International Cooperation Agency) சுருக்கமாக ஜெய்கா (JICA) இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த இறுதி விவரங்கள் எதுவும் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. ஸ்மார்ட் சிட்டி வந்தால் பொருளாதாரத்தில் மாற்றங்களும், வேலைவாய்ப்பு மற்றும் உள்நாட்டு தேவைகள், ஏற்றுமதி பெருகும்



என எதிர்பார்க்கிற தொழில்துறை.

தற்போது முதல்கட்டமாக இதை அமைப்பதற்கான அடிப்படை வசதிகளை ஆய்வு செய்து வருகின்றனர். தொழிற் சாலைகள் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதற்கான நிலம், நிலத்தடி நீர், மின்சாரத் தேவைகள், போக்குவத்து இணைப்பு, துறைமுக, விமான இணைப்பு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விவரங்களை ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிக்கை அளிக்கும் பணியில் ஜப்பானைச் சேர்ந்த ஆய்வு கமிட்டி ஒன்று செயல்பட்டு வருகிறது.

மேலும் இந்த நிறுவனத்தின் சார்பாக நிப்பான் கொய் (Nippon Koei) மற்றும் பிரைஸ்வாட்டர் ஹவுஸ்கூப்பர்ஸ் என்கிற இரண்டு சர்வதேச ஆய்வு நிறுவனங்களும் இந்த ஆய்வு வேலைகளில் ஈடுபட்டுள்ளன. இவர்கள் கொடுக்கும் அறிக்கை அடிப்படையில் அடுத்தகட்ட அறிவிப்புகள் வெளிவரலாம்.

எண்ணூர் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு பொன்னேரி அதன் சுற்றுவட்டார பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேலும் வட பொன்னேரி, மீஞ்சூர், பகுதிகளில் பல மின் உற்பத்தில் நிலையங்களும் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் எண்ணூர் துறைமுகம் நிலக்கரிகளை அதிக அளவில் கையாளுவதால், மின் தேவைகளை அதிகரித்துக்கொள்ளும் வாய்ப்புகளும் அதிகம்.

சென்னை ஏற்கனவே ஆட்டோ மொபைல் துறையின் முக்கிய உற்பத்தி மையமாக இருப்பதால் இதனடிப்படையில் முதலீடுகள் வருவதும் எளிது. மேலும் எண்ணூர் துறைமுக விரிவாக்கத்தில் அதானி குழுமம் சரக்கு பெட்டக முனையம் அமைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தமும் உள்ளது.

எனவே எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகங்கள், தொழிலகங்களுக்குத் தேவையான மின் உற்பத்தி இவற்றைக் கணக்கில் கொண்டு இப்பகுதியை ஸ்மார்ட் சிட்டி அமைக்க தேர்ந்தெடுத்துள்ளதாகத் தெரிகிறது. உற்பத்தி சார்ந்த தொழிற் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தற்போதைக்குச் சுமார் 25 தொழில்கள் வரை அடையாளம் காணப்பட்டுள்ளன.



சர்வதேச வசதிகளுடன் அமைய விருக்கும் இந்த ஸ்மார்ட் சிட்டி பொன்னேரியில் எந்தப் பகுதியில் அமையலாம் என்பதில் தெளிவு இல்லை. இந்த ஊர்காரர்களுக்கு குழப்பம்தான். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளதைத் தாண்டி வேறெந்த விவரங்களும் தெரியாது என்கின்றனர் இந்தப் பகுதியில் வசிப்பவர்கள்.


பொன்னேரி நகரத்துக்கு வெளியே ஏலியம்பேடு, கனியம்பாக்கம், செங்கனிமேடு போன்ற பகுதிகளில் ஏதாவது ஒன்றை மையமாக வைத்து இந்தத் திட்டம் அமையலாம் என்பதுதான் தற்போதைய ஊகம்.

தற்போது ஆய்வில் ஈடுபட்டுள்ள ஜப்பான் நிறுவனம் மற்றும் இரண்டு ஆய்வு நிறுவனங்களுக்கும் தேவையான உதவிகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமான டிட்கோ செய்து வருகிறது. மேற்கொள்ளப்படும் ஆய்வுகளைத் தமிழக அரசு அதிகாரிகளுடன் பேசி அதன் சாதக, பாதகங்களை உடனுக்குடன் அந்த நிறுவனத்துக்கு தெரியப்படுத்தும் வேலையை டிட்கோ செய்து கொடுப்பதாக சொல்கின்றனர் அதிகாரிகள்.

இதன் மூலம் தொழில் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க முடியும், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டிவருகிறது. இதை ஒட்டி தொழில் பாதையும் அமைய வாய்ப்புள்ளதால் புதிய வேலைவாய்ப்புகள் பெருகும் என்கின்றனர் தொழில்துறை வல்லுனர்கள்.

முக்கியமாக எண்ணூர் துறைமுகத்தை பயன்படுத்துபது போல தொழில்கள் வளரும். மேலும் உற்பத்தியல்லாத 40% தொழில்கள் ஊக்குவிக்கப்படும் என்பதால் ஐடி மற்றும் சேவைத் துறை சார்ந்த தொழில்கள் வளரவும் வாய்ப்புகள் உருவாகும் என்கின்றனர்’

உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை தருவதாக அமையலாம். சுமார் 60% வரை உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கும், சேவை மற்றும் பிற தொழில் நிறுவனங்களுக்கு 40% இடம் ஒதுக்கப்படலாம். சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதிகள் உடனடியாகக் கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பும் உள்ளது.




திட்ட உத்தேச முதலீடு, எவ்வளவு முதலீடுகள் இந்த ஸ்மார்ட் சிட்டியால் ஈர்க்கப்படும், என்ன தொழிற்சாலைகள் வரும், வேலைவாய்ப்பு உருவாக்கம் எப்படி இருக்கும் என்பதெல்லாம் ஆய்வு அறிக்கைகளுக்கு பிறகான அடுத்த கட்ட அறிவிப்புகளுக்குப் பிறகுதான் தெரிய வரும். அதுவரையில் ஸ்மார்ட் சிட்டி கனவு நகரமாகவே இருக்கும்.



எச்சரிக்கை

# ஏரிகளில் ஆக்கிரமிப்பே கூடாது

தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்படும் முன்பு, தாமிரபரணி ஆற்றை, "ஊற்றெடுத்த மாவட்டத்திலேயே கடலில் கலக்கிற நதி" என்று பெருமையோடு கூறுவார்கள். இப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உருவாகி, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலில் கலக்கும் தாமிரபரணி ஆறு, தட்சிண கங்கை என்று அழைக்கப் படுகிறது. தாமிரபரணியின் குறுக்கே ஸ்ரீவைகுண்டத்தில் 1869ம் ஆண்டு கலெக்டராக இருந்த பக்கிள் என்பவரின் முயற்சியால் கட்டப்பட்ட அணை, அந்த பகுதியில் உள்ள 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சாகுபடிக்கு வளப்படுத்தியது. இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் சரியாக தூர்வாரப்படாததால், அந்த அணை மண்மேடிட்டு முள்மரங்கள் காடுபோல வளர்ந்து ஒரு நீர்நிலையாக இல்லாமல், காடாகிவிட்டதைக்கண்டு அந்தபகுதி மக்கள் ரத்தக்கண்ணீர் வடித்தனர். ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவும், மாவட்ட செயலாளர் ஜோயலும், நீதிமன்ற கதவுகளையும், பசுமைத் தீர்ப்பாயத்தின் கதவுகளையும் தட்டியதால், இப்போது விடிவுகாலம் வந்து தமிழக அரசு, ஸ்ரீவைகுண்டம் அணையை தூர்வார உத்தரவிட்டு பணிகள் தொடங்கிவிட்டன. இதுமட்டுமல்லாமல், பசுமை தீர்ப்பாயம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அணைகளையும் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 89 அணைகளும், 39 ஆயிரத்து 202 ஏரிகளும் உள்ளன. இதுபோல, சிறு சிறு குளங்களும், கசிவுநீர் குட்டைகளும் ஏராளமாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் மழைவளம் குறைவாக இருந்தாலும், இவ்வளவு நீர்நிலைகளிலும் முழுநீர் கொள்ளளவில் தண்ணீரை சேமித்தால், நிச்சயம் பயிர் சாகுபடிக்கும் சரி, குடிநீருக்கும் சரி தண்ணீர் பற்றாக்குறையே இருக்காது. ஆனால், சரியாக தூர்வாரப் படாமல், மராமத்து செய்யப்படாமல் அனைத்து நீர் நிலைகளும் மண்மேடாகி விட்டன. முழு கொள்ளளவில் எந்த நீர்நிலையும் இல்லை. இதுமட்டுமல்லாமல், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் அதிகமாகி விட்டன. நீர்நிலைகளை ஆக்கிரமித்து வீடுகள் கட்டி விட்டனர்.

எடுத்துக் காட்டாக, சென்னை ராஜகீழ்ப்பாக்கம் ஏரி 105 ஏக்கர் பரப்பில் இருந்தது, இப்போது 10 ஏக்கருக்கும் குறைந்து, மீதி இடங்களில் 1,400 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆதம்பாக்கம் ஏரியை ஆக்கிரமித்து 496 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. இதில், வேதனை கலந்த வியப்பு என்னவென்றால், ஆக்கிரமித்து கட்டப் பட்டுள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. வீட்டு வரி, சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. அங்கு வீடுகட்டி வசிப்பவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்ற இடங்களில்கூட இவ்வளவு சீரான சாலை வசதி இல்லை, குடிநீர், வடிகால் வசதிகளெல்லாம் நிறைவான அளவுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன என்றால், இதற்கு அரசு அதிகாரிகள்தான் முழுக்க முழுக்க காரணம். ஆக்கிரமிப்பு என்பது சட்டவிரோதமானது. அப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களுக்கு இவ்வளவு வசதிகளையும் செய்துகொடுக்க யார் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது?. தமிழ்நாடு முழுவதும் உள்ள நீர்நிலைகளில் இத்தகைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அரசு உடனடியாக அதிரடி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆக்கிரமிப்புகளை அனுமதித்து, வசதிகளை செய்துகொடுத்த அதிகாரிகள்மீது சட்டம் பாயவேண்டும்.

அரசிடம் உள்ள நில ரிக்கார்டுகளில் ஒவ்வொரு அணைக்கட்டுகள், ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளின் பரப்பு என்ன?, இப்போது அதன் பரப்பு என்ன? என்பதை கணக்கிட்டு, ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றவேண்டும். நீதிமன்ற உத்தரவுப்படி, ஹெல்மெட் போடாதவர்கள் மீது இவ்வளவு நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள், உச்சநீதிமன்றமே ஆக்கிரமிப்பு களை அகற்ற உத்தரவு பிறப்பித்திருக்கும் நிலையிலும், அரசாங்கத்தின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்களிடம் இருந்து நீர்நிலைகளை மீட்கவேண்டும் என்ற அடிப் படையிலும், உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

கண்கெட்டப்பின் சூரிய நமஸ்காரம் வேண்டாம்.

இந்தியா முழுவதும் இவ்வருடம் சராசரி மழை அளவு குறையுமாம். ஏற்கனவே தமிழ்நாடு குறைமழை பிரதேசம். முன்னோர்கள் முன்யோசனையோடு பிற்கால சந்ததியருக்காக ஏரி குளங்களை வெட்டினர். நமது பின் புத்தியால் ஏரிகுளங்களை நாசப்படுத்தி இக்கால சந்ததியர்களையே கொல்கிறோம்.

# வேலை கொடு...
## வேண்டாம் இலவசங்கள்

மத்திய அரசாங்கமும், மாநில அரசுகளும், மக்களுக்கான பொருளாதாரத்திட்டம் என்றாலும் சரி, சமூக நலத்திட்டங்களானாலும் சரி, ஒரு இலக்கை நிர்ணயித்து, அதற்குரிய வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு தற்போதைய நிலை நிச்சயமாக தெரிந்தாகவேண்டும். அது தெரியவேண்டுமானால், அதுதொடர்பான கணக்கெடுப்பு அத்தியாவசியமானதாகும். அந்த வகையில், நாட்டு மக்களிடையே உள்ள சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு 1934ம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஏழை,எளியவர்களுக்கான உயர்வு திட்டங்களை வகுப்பதற்கு துணைபுரியும் இந்த கணக்கெடுப்பு 81 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் வெளியிடப் பட்டுள்ளது. இதில் சமூக, பொருளாதார விவரங்கள் மட்டும் இப்போது வெளியிடப் பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பு கிராமப் புறப் பகுதிகளை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நகர்ப்புற விவரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

சாதி பற்றிய கணக்கெடுப்பு விவரங்கள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. இந்த கணக்கெடுப்பு விவரங்கள் மத்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசுகளுக்கும், கிராமப்புறங்களில் உள்ள ஏழை,எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற் கான கொள்கை முடிவுகளை எடுக்க பெரிதும் உதவும்.

இந்தியா முழுவதிலும் நகர்ப்புறங் களிலும், கிராமப்புறங்களிலும் சேர்த்து 24 கோடியே 39 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இதில், 17 கோடியே 91 லட்சம் குடும்பங்கள் கிராமங்களில் வாழ்கின்றன.



இப்போது வெளியிடப் பட்டுள்ள கணக்கெடுப்புப்படி, இதில் 10 கோடியே 69 லட்சம் குடும்பங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றன. இந்த குடும்பங்களில் 74.49 சதவீத குடும்பங்களில் அதிகம் சம்பாதிக்கும் குடும்ப உறுப்பினர் மாதம் ரூ.5 ஆயிரத்துக்கும் குறைவாகவே சம்பாதிக்கிறார் என்பது அதிர்ச்சியான தகவலாக இருக்கிறது. 5 கோடியே 37 லட்சம் குடும்பங்களில் உள்ள மக்கள் தினக்கூலியாகவே இருக்கிறார்கள். கவலை அளிக்கும் மற்றொரு விவரம் 65 லட்சத்து 15 ஆயிரம் குடும்பங்களில், 18 வயது முதல் 59 வயது வரையிலான படித்த குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை. வருமானம் இருக்கிறதோ, இல்லையோ, 68.35 சதவீத குடும்பங்களில் செல்போன்கள் இருக்கிறது என்றால் ஒன்று உறுதியாக தெரிகிறது. செல்போன் என்பது அனைத்து குடும்பங்களிலும் அத்தியாவசிய தேவையாகி விட்டது.




தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில், மொத்தம் உள்ள ஒரு கோடியே 67 ஆயிரத்து 849 வீடுகளில், 42.47 சதவீத குடும்பங்கள் நகர்ப்புறங்களில் வசிக்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் 78.08 சதவீத குடும்பங்களில் உள்ள அதிகம் சம்பாதிக்கும் உறுப்பினர் மாதம் ரூ.5 ஆயிரத்துக்கு குறைவாகவே சம்பாதிக்கிறார்கள். 55.80 சதவீத குடும்பங்களுக்கென சொந்தமாக நிலம் இல்லாத நிலையில், தினமும் கூலிவேலைக்கு சென்றுதான் சம்பாதிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். தமிழக கிராமப்புறங்களில் உள்ள மக்கள் வைத்திருக்கும் செல்போன்களின் எண்ணிக்கை மற்றும் இருசக்கர வாகனம் வைத்திருப்போர் கணக்கைப்பார்த்தால், தேசிய சராசரியைவிட அதிகமாகவே இருக்கிறது. மொத்தமாக இந்த கணக்கெடுப்பை பார்த்தால், கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இலவசங்களைக் கொடுத்து ஏழ்மையில் இருந்து அவர்களை வெளியே கொண்டுவரமுடியாது. தனிநபர் வருமானத்தை பெருக்க வேண்டிய திட்டங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசர அவசியம் மத்திய, மாநில அரசுகளுக்கு வந்துவிட்டது என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. எனவே, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும். கிராமப்புற மக்கள் விவசாயத்தை அடிப்படையாகவே கொண்டு வாழ்வதால், வேளாண் வளர்ச்சியிலும், அதுதொடர்பான சிறு தொழில்களிலும் தீவிரம் காட்டவேண்டும். இதுபோல, கிராமப்புறங்களில் தரமான கல்வி, மருத்துவ உதவி கிடைக்கவேண்டும்.



# பெண்களுக்கு ஜீன்ஸ் ஆபத்தானதா?

# ஜீன்ஸ் அணியும் பெண்களே உஷார்...!

ஆஸ்திரேலியாவில் பெண் ஒருவர் இறுக்கமான ஜீன்ஸ் அணிந்ததால் அவரது கால்கள் பெருமளவு உணர்விழந்த சம்பவத்தை அடுத்து, இறுக்கமான ஜீன்ஸ் அணிவதால் நரம்பியல் பாதிப்பு ஏற்படும் என்பதை தாங்கள் கண்டறிந்துள்ளதாக ஆஸ்திரேலிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தனது உறவினர் ஒருவர் வீடு மாற்றுவதற்கு உதவச்சென்ற பெயர் குறிப்பிடப்படாத அந்த பெண், இறுக்கமான ஜீன்ஸ் அணிந்து பல மணி நேரம் முழங்கால்களை மடக்கி உட்கார்ந்திருக்கிறார்.

அதனால் அவரது கால்களின் கீழ்ப்பகுதியில் உணர்விழந்துபோன நிலையில் அந்த பெண் திடீரென மயங்கி விழுந்துவிட ஆபத்து அதிகமானது. அவரது கால்களின் கீழ்ப்பகுதி பெருமளவு வீங்கியிருந்ததால் அவர் அணிந்திருந்த ஜீன்ஸ் கழற்ற முடியாமல் அதை அவசர அவசரமாக வெட்டி எடுக்க வேணிய அளவுக்கு நிலைமை விபரீதமானது. இறுக்கமான ஜீன்ஸ்கள் ஒன்றுக்கும் மேற் பட்ட பிரச்சனைகளை தோற்றுவிக் கின்றன. அவர் அணிந்திருந்த இறுக்கமான ஜீன்ஸை வெட்டி எடுத்துவிட்டு அவருக்கு நான்கு நாட்களுக்கு மருத்துவ மனையில் வைத்து நரம்பூசி மூலம் மருந்து செலுத்தப்பட்டு தொடர் சிகிச்சையளிக்கப் பட்டது.



### இரத்த ஓட்டத்தை தடுத்து நரம்புகளை பாதிக்கக்கூடும்

அவர் இறுக்கமான ஜீன்ஸ் அணிந்து பல மணிநேரம் அமர்ந்திருந்ததால் அவரது கால்களுக்கான இரத்த ஓட்டம் தடைபட்டு பாதிப்பு ஏற்பட்டதாகவும், அத்துடன் அவரது கால் தசைகள் மற்றும் நரம்பு களுக்கும் சேதம் ஏற்பட்ட தாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.'ஜர்னல் ஆப் நியூராலஜி, நியூரோசர்ஜரி மற்றும் சைக்கியாட்ரி' என்ற மருத்துவ சஞ்சிகையில் இது குறித்த மருத்துவர்களின் குறிப்புகள் வெளியிடப் பட்டுள்ளன.

இறுக்கமான ஜீன்ஸ் அணிவது உடலுக்கு நல்லதல்ல என்கிற எச்சரிக்கை விடப்படுவது இது முதல் முறையல்ல. இளம் தலைமுறையினர் மத்தியில் தங்களின் உடல் வனப்பை வெளிப்படுத்தும் நாகரிக உடையாக இறுக்கமான ஜீன்ஸ் பார்க்கப்பட்டாலும், பெரிதும் விரும்பப்பட்டாலும், அது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்கிற எச்சரிக்கைகள் தொடர்ந்து மருத்துவர்களால் விடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

### ஆண்களுக்கும் பிரச்சனை

இறுக்கமான ஜீன்ஸ்களால் விதைப்பைகள் உருமாறி, விந்தணு உற்பத்தி குறையும்

காரணம் இறுக்கமான உடைகள் அணியும்போது ஆணின் விதைப்பைகள் தொடர்ந்து உடலோடு அழுத்தி இறுக்கி வைக்கப்படுகின்றன. அது விதைப்பைகளின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்து விந்தணு உற்பத்தியை பாதிக்கும் என்கிறார் சாரா. எனவே குழந்தை பெற விரும்பும் ஆண்கள் ஆரோக்கிய மான விந்தணு உற்பத்திக்கு உதவும் வகையில் இறுக்கமான ஜீன்ஸ் அணியாமல், காற்றோட்டமான ஆடைகளை அணியவேண்டும் என்கிறார் அவர்.

### சிறுநீர்ப்பாதைத் தொற்று மற்றும் நெஞ்செரிச்சலை அதிகரிக்கும் :

சிறுநீர்ப்பாதையில் தொற்று இருப்பவர்களும் கூட இறுக்க மான ஜீன்ஸ் அணியக்கூடாது என்று மருத்துவர்கள் எச்சரிக் கிறார்கள். காரணம் இறுக்கமான உடைகள் அவர்களின் சிறுநீர்ப் பாதை தொற்றை அதிகரிக்கச் செய்யும் என்றும் மோசமடையச் செய்யும் என்றும் மருத்துவர்கள் அறிவுரை கூறுகிறார்கள்.

அதேபோல, நெஞ்செரிச்சல் பிரச்சனை இருப்பவர்களும் இறுக்கமான ஜீன்ஸ் அணியக் கூடாது என்று மருத்துவர் கள் கூறுகிறார்கள். காரணம் இறுக்க மான ஜீன்ஸ்கள், அடி வயிற்றில் கூடுதலான அழுத்தத்தை செலுத்து வதால், வயிற்றில் சுரக்கும் அமிலங்கள் மேல் நோக்கி உந்தப்பட்டு ஏற்கனவே இருக்கும் நெஞ்செரிச்சல் பிரச்சனையை மேலும் அதிகப்படுத்தும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

இறுக்கமான ஜீன்ஸ் களால் நெஞ்செரிச்சல்; சிறு நீர்ப்பாதை தொற்றையும் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறத.

நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் தங்களின் உடல் வனப்பை காட்ட நாகரிக உடையாக இறுக்கமான ஜீன்ஸ் அணிய விரும்பும் போது அதில் இருக்கும் ஆபத்தையும் உணர்ந்திருப்பது அவசியம் என்பதே மருத்துவர் களின் அறிவுரையாக இருக்கிறது.



மது அரக்கன் என்று யார் முதலில் அழைத்தார்களோ தெரியாது. ஆனால் இன்று அந்த மது அரக்கனின் கொடூரத்தால் தமிழகமே தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சாலை விபத்துக்கள் அதிகமாக நடக்கும் மாநிலம் தமிழ்நாடு தான். இதனால் உயிரிழப்பவர்களுக்கும் முதலிடம் தமிழ் நாட்டுக்குத்தான். 2006 ஆண்டு முதல் 2014 வரை தமிழ்நாட்டில் சாலை விபத்துக் களால் இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 1,80,000 இதில் வாகன ஓட்டிகள் குடித்து விட்டு ஓட்டுவதால் தான் அதிகமான விபத்துக்கள் நடைபெறு கின்றன. சாலை விபத்துக்களால் நடுத் தெருவுக்கு வந்த குடும்பங்கள் ஏராளமாக இருக்க, இக்கொடிய மது அரக்கனால் ஒரு சமுதாயமே சீரழியும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது.

சில காலத்திற்கு முன்பு இளைஞர்கள் குடிப்பது என்பது மிகத்தவறான செயல் என்ற எண்ணம் போய் இன்று குடிப்பது ஒரு சமூக அந்தஸ்து என்று எண்ணும் அளவுக்கு இளைஞர்களும், இளைஞிகளும் குடிக்க ஆரம்பித்து விட்டனர். அதில் அதிர்ச்சியான ஒரு செய்தி என்னவென்றால் பெண்களும் மதுப்பிரியர் களாகி வருகிறார்கள் என்பது தான். கணவன்மார் களால் வற்புறுத்தப்பட்டு குடிக்கும் பெண்கள், பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் "சோஷியல்டிரிங்" என்று வீக் எண்ட் பார்ட்டிகளில் குடிப்பது என்று குடிமகள்காகவே மாறிவருவது எதிர்கால சமுதாயத்திற்கு சரியா? இதனால்

# என்று ஒழியும் இந்த மதுவின் தாகம்?





பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், விவாகரத்து வழக்குகளில் பெரும்பான்மையானவை கணவன்மார்கள் குடித்து குடும்பத்தை சீரழிக்கிறார்கள் என்ற வழக்குகள்தான். குடியினால் குடும்ப வாழ்க்கையை தொலைத்த சில உண்மை சம்பவங்களை பார்ப்போம்.

**திருமண வைபவங்கள் முடிந்து முதலிரவுக்காக காத்திருந்த பெண்களுக்கு நேர்ந்த கொடுமை,**

வசதியான குடும்பத்து பெண்ணான அவள் இஞ்சினியரிங் படிப்பு முடித்தவுடன் மேற்படிப்பு படிக்க விரும்பினாள். ஆனால் பெற்றோர்கள் அவளுக்கு திருமணம் செய்து பார்க்க அசைப்பட்ட தால் அவளும் சம்மதம் தெரிவித்தாள். பெற்றோர்கள் பார்த்த மாப்பிள்ளையும் கோட்டீஸ்ர குடும்பம்தான். மாப்பிள்ளையும் படித்தவர் என்பதால் அவளும் திருமணத்திற்கு சம்மதித்தாள். திருமணமும் ஆடம்பரமாக நடந்தது. முதலிரவு அன்று மனம் படபடக்க அறைக்குள் நுழைந்தவளுக்கு தலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது. அறையில் மதுவின் வாடை குடலை புரட்டிப் போட்டது. கணவன் குடித்திருக்கிறார் என்பது தெரிந்தது. அன்று அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் தொடர்ந்தது. ஒரு மாதமாகியும் அவளுக்கு முதலிரவு நடக்கவில்லை. தன் தோழியிடம் தனக்கு நேர்ந்த சோகத்தை கூற தோழி அப் பெண்ணின் பெற்றோர்களிடம் விஷயத்தை தெரிக்க அவர்கள் அதிர்ந்து போனார்கள். மாப்பிள்ளையின் பெற்றோரை விசாரித்த போது மாப்பிள்ளைக்கு பள்ளி பருவத்திலேயே குடிப்பழக்கம் இருந்துள்ளது. கல்லூரியிலும் குடியை அவரால் நிறுத்த முடியவில்லை. திருமணம் செய்தால் திருந்திவிடுவான் என்று எண்ணிய பெற்றோர்கள் அவனுக்கு திருமணம் முடித்தனர். ஆனால் சிறுவயதிலிருந்தே குடிக்க ஆரம்பித்தால் அவனுடைய நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டது மருத்துவ ஆய்வில் தெரியவந்தது. அதனால் அவன் ஆண்மையை இழந்துவிட்டது தெரிய வந்தது. நடந்து திருமண பந்தத்தை நீதிமன்றத்தில் வைத்து முடித்துக் கொண்டார்கள். விவகாரத்து பெற்ற




அவனோ குடித்து குடித்து காலத்தை முடித்து கொள்வான். ஆனால் நல்ல குடும்பத்தைத் சேர்ந்த படித்த அந்த பெண்ணின் எதிர்காலம்? மறுமணம் செய்து கொள்ளலாம் என்றாலும் அநத் வாழ்க்கை எப்படி அமையும் என்பது அவளுக்கு கேள்விக்குறியே.

அடுத்தாக நடுத்தர குடும்பத்தை சேர்ந்த காதல் மணம் புரிந்த பெற்றோர்களுக்கு அவன் ஒரே மகன். காதல் திருமணம் என்பதால் அவனுடைய பெற்றேர்கள் சந்தித்த இன்னல்கள் ஏராளம். தந்தையின் குடும்பம் முற்றிலுமாக கைவிட்ட நிலையில் பெண்ணின் குடும்பம் கை கொடுத்தது. பெற்றேர்கள் சிரமங்களுக்கிடையேயும் இவனை சிறப்பாக வளர்த்தனர். தந்தை சிறிய அளவில் உணவகம் ஆரம்பித்து தன்னடைய கடின உழைப்பால் குடும்பம்

பொருளாதாரம் உயர்த்தினார். அவனுக்கு பள்ளிப்படிப்பு கைகொடுக்கவில்லை ஆதலால் சுயதொழிலில் ஆர்வம் காட்டலானான். தொழிலும் கற்றான். தந்தை மற்றும் தாய்மாமன் உதவியுடன் சென்னையில் ஆப்டிக்கல்ஸ் விற்பனை கடையை திறந்து திறமையாகவே நடத்தி வந்தான். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று கண்ணதாசன் சொன்னார். சொல்லாதது நல்ல நண்பர்கள் அமைவதும் இறைவன் கொடுத்த வரமே. நண்பர்கள் கூடினார்கள். குடித்தார்கள். தினம் குடித்தார்கள். எல்லோரையும் போலவே திருமணம்




செய்தால் சரியாகிவிடும் என்று திருமணம் செய்து வைத்தனர். மனைவி செல்வ செழிப்போடு வளர்ந்தவள். பொறியியல் பட்டதாரியும் கூட. அவன் மனைவிக்கு எல்லாமே பிடித்திருந்தது அவனுடைய மது பழக்கத்தை தவிர. அழகான பெண் குழந்தையும் பிறந்தது. மற்றற்ற மகிழ்ச்சி இல்லை குடும்பத்தில் குடிபழக்கம் அவனுக்கு, மனக்குமுறல் அவளுக்கு. மனைவி பெற்றோரை காண சென்றிந்தாள். வீட்டில் தனியாக இருந்த அவன் அதிகபடியாக குடித்ததால் தடுமாற்றத்தில் விழுந்து தலையில் அடிபட்டது. சென்னை உள்ள பெயர் பெற்ற மருத்துவ மனையில் சேர்த்தனர். நாட்கள் கரைந்தன. பல லட்சங்கள் கரைந்தது. கடைசியில் அவனும் காற்றில் கரைந்தான். கைக்குழந்தையுடன் அந்த கைம்பெண்ணின் எதிர்காலம்?

திருவண்ணாமலை மாவட்டத்தில், 4 வயது பால்மணம் மாறாத பச்சிளம் பாலகன், உறவினர்கள் தந்த ஊக்கத்தால் மதுவை குடிக்கும் காட்சி காட்டப்பட்டது. அந்த சிறுவன் குடித்த ஸ்டைலைப் பார்த்தால் அன்று மட்டும் குடித்தவன் போலத் தெரியவில்லை. அவன் முகம் சுளிக்காமல் மதுகுடித்ததும், சைடு டிஷ்ஷை சாப்பிட்டதும், குடித்து முடித்துவிட்டு சர்வ சாதாரணமாக கிளாசை தூக்கி எறிந்ததையும் பார்த்தபோது மனம் வருந்தியது. அடுத்தநாள் மதுரை மாவட்டத்தில் 3 வயது சிறுவன் குடித்த காட்சி வேதனையில் ஆழ்த்தியது. இந்த அதிர்ச்சி மறைவதற்கு முன்னால், கோயம்புத்தூரில் 16 வயது பிளஸ்+2 மாணவி பள்ளிக்கூட சீருடையிலேயே குடித்துவிட்டு போதையில் புரள்வதும், உளறுவதையும் பார்க்கும்போது ரத்தக் கண்ணீர் வடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தபெண் தன் தோழி களுக்கும் மது விருந்து அளித்திருக்கிறார் என்றால் அவர் மட்டுமல்ல, அவரது தோழிகளும் குடித்து இருக்கிறார்கள். இதுபோல பல சம்பவங்கள் இப்போது அரங்கேறியிருக்கின்றன.



அந்த மாணவி குடிப்பதற்கு மதுக்கடையில் போய் மது வாங்கினார் என்றும், இல்லை இல்லை அவருடன் படித்த மாணவன்தான் வாங்கிக் கொடுத்தான் என்றும் ஆளுக்கொரு காரணம் கூறுகிறார்கள். யார் வாங்கினாலும், 21 வயதுக்கு குறைவான அந்த மாணவர்களுக்கு மது விற்ற டாஸ்மாக் கடை ஊழியர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மது என்பது 21 வயதுக்கு குறைவானவர்களுக்கு எட்டாக் கனியாக இருக்கவேண்டும். அப்படி இருக்கவேண்டுமென்றால், ஒருவர் வயதை அறியும் வகையிலான அடையாள அட்டையை காட்டினால் தான் மதுவிற்பனை என்று விதிகளை கொண்டுவரலாம். இப்போதெல்லாம் ஆதார் அட்டையும், வாக்காளர் அடையாள அட்டையும்தான் எல்லோரிடமும் இருக்கிறதே!. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாங்கி, அதற்கு குறைந்தவர்களுக்கு கொடுக்காத சமுதாய கடமை அவர்களுக்கும் உண்டு.

அனைத்து பள்ளிக்கூடங்களிலும் மனநல ஆலோசகர்களைக்கொண்டு, மாணவர்களின் மனதை பக்குவப்படுத்த வேண்டும். மத்திய அரசாங்கத்தால் தமிழ்நாட்டில் உள்ள 25 மாவட்டங்களில் மனநல திட்டங்களை செயல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அது நடை முறையில் இருப்பதுபோல தெரியவில்லை. அனைத்து பள்ளிக்கூடங்களுக்கும் மனநல ஆலோசகர்கள் செல்வது என்பது இயலாததாக இருந்தால், அந்தந்த பள்ளிக்கூடத்திலேயே ஒழுக்கத்தில் சிறந்த தியாக மனப்பான்மையுள்ள ஆசிரியர்களுக்கு குறுகியகால பயிற்சி அளித்து இந்த பணியில் ஈடுபடுத்தலாம். தமிழக அரசு இந்த ஆண்டு முதல் அனைத்து பள்ளிக்கூடங்களிலும் 6ம்



வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை வாரம் ஒருநாள் நீதி போதனை வகுப்பை நடத்த உத்தர விட்டுள்ளது. இது நிச்சயமாக பலன் அளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நீதி போதனை வகுப்பில் இந்த எதிர்கால சந்ததியை மதுப்பழக்கம், புகையிலைப்பழக்கம், போதை பழக்கம் பக்கம் போகாத வகையில், ஒழுக்க நெறிகளை பழக்குவதையே முக்கிய பாடமாகக் கொள்ளவேண்டும்.

பெற்றோரும், உறவினர்களும் இந்த முயற்சியில் தங்கள் பெரும் பங்கை ஆற்ற வேண்டும். இனியும் இதுபோன்ற கொடுமைகள் நிகழக்கூடாது என்றால் மது எக்ற அரக்கனை சம்ஹாரம் செய்வோம்.



மெல்லிசை மன்னர் என தமிழ்ச் சமூகத்தால் அன்புடன் அழைக்கப்பட்ட பிரபல இசையமைப்பாளர் எம்எஸ் விஸ்வநாதன் இன்று அதிகாலை 4.15 மணிக்கு மரணமடைந்தார். அவருக்கு வயது 87. மனயங்கத் சுப்ரமணியன் விஸ்வநாதன் என்ற இயற்பெயர் கொண்ட எம்எஸ் விஸ்வநாதன் பாலக்காட்டில் உள்ள எலப்புள்ளி கிராமத்தில் 1928ல் பிறந்தவர். அவரது பெற்றோர் மனயங்கத் சுப்பிரமணியன் நாராயணி குட்டி. நான்கு வயதில் தந்தையை இழந்து வறுமையில் வாடிய எம்எஸ்வி, மிக இளம் வயதிலேயே நாடகக் குழுவில் சேர்ந்தார். நடிக்கவும், பாட்டுப் பாடவுமே அவரது விருப்பமாக இருந்தது. 13 வயதில் திருவனந்தபுரத்தில் தனது முதல் மேடைக் கச்சேரியை நடத்திய எம்எஸ்வி, 1950களில் எஸ்எம் சுப்பையா நாயுடு மற்றும் சிஆர் சுப்பாராமன் ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றினார். 1952ல் சி ஆர் சுப்பாராமன் காலமாகிவிட, அந்த நேரத்தில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த மருமகள், சண்டி ராணி, தேவதால் மற்றும் ஜெனோவா போன்ற படங்களை முடித்துக் கொடுத்தவர் எம்எஸ்விதான். பின்னர் கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன் தயாரித்த பணம் படத்துக்கு இசையமைப்பாளர்களாக எம்எஸ்வியும் டிகே ராமமூர்த்தியும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். எம்எஸ்வி டிகே ராமமூர்த்தி இரட்டை இசையமைப்பாளர்கள் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாக அறிமுகமான படம் பணம்தான். அதன் பின்னர் இந்த இரட்டையர்கள் காலம்தான் தமிழ் சினிமாவில் கொடிகட்டிப் பறந்தது. 1952 லிருந்து 1965 வரை இந்த இருவரும் இணைந்து காலத்தால் மறக்க முடியாத பல காவியப் பாடல்களைப் படைத்தனர். இருவரும் இணைந்து 100க்கும் அதிகமான திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளனர். இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். டிகே ராமமூர்த்தியைப் பிரிந்த பிறகு, தனியாக 700 க்கும் மேற்பட்ட படங்களில் இசையமைத்தார் எம்எஸ் விஸ்வநாதன். கடைசியாக அவர் இசையமைத்த படம் சுவடுகள். தமிழ் தவிர, மலையாளத்தில் 74 படங்களுக்கும், தெலுங்கில் 31 படங்களுக்கும் இசையமைத்துள்ளார் எம்எஸ்வி. கடந்த சில வாரங்களாகவே உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எம்.எஸ்.விஸ்வநாதன் ஜூலை மாதம் 14ம் தேதி அதிகாலை 4.15 மணிக்கு காலமானார். இவர் தென்னிந்திய பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருதும், சிறந்த இசையமைப்பாளருக்கான கேரள அரசு விருதும் பெற்றவர். காலத்தால் அழியாத பல காவியப் பாடல் தந்த எம்எஸ் விஸ்வநாதனின் மனைவி ஜானகி கடந்த 2012ம் ஆண்டு மறைந்தார். எம்எஸ்வி ஜானகி தம்பதிக்கு நான்கு மகன்கள், மூன்று மகள்கள்.

அவருடைய மறைவிற்கு தமிழ் உலகமே திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியது.

# மின் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு

மின்சாரத்தை பயன்படுத்துவதில் மிகுந்த கவனமாக செயல்படவில்லை என்றால் நமக்கு நட்பாக இருக்கும் மின்சாரம் நமக்கு எமனாகிவிடும். நமது உடலினூடாக மின்சாரம் பயணிப்பதால் ஆபத்தை ஏற்படுத்துகின்றது. இடி, மின்னலின் போது டி.வி., மிக்சி, கிரைண்டர், கம்ப்யூட்டர், உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் நல்லது. இடி மின்னலால் ஏற்படும் மின்சாரம் உடம்பின் ஊடாகப் பாய்ந்து வெளியேறு கின்ற சூழலையும் வழியையும் பொறுத்தே அதனால் ஏற்படுகின்ற தாக்கம் அமையும். இடிதாங்கி, கோபுரம் பாதுகாப்பான பிரதேசம். நிலை குத்தாகப் பொருத்தப் பட்டுள்ள இடி தாங்கியில் இருந்து 45 பாகை (Degree) ஊடான பிரதேசம் பாதுகாப்பான பிரதேசம் ஆகும் செல்போனில் சார்ஜ் ஏறிக் கொண்டு இருக்கும் போது பேசக்கூடாது. ஒவ்வொரு கட்டிடத்திலும் சரியான எர்த் பைப் அமைக்கப்படுவதுடன், குழந்தைகள்,





தொலைபேசி ஆகியவற்றை பயன்படுத்த கூடாது. மின்சார உபகரணங்களைப் பிரதான மின் சுற்றிலிருந்து கழற்றி துண்டித்து வைக்க வேண்டும். தொலைக் காட்சிப் பெட்டிகளின் ஆன்டனாக்களைத் துண்டித்து வைப்பதுடன் ஆன்டனா கட்டடப்பட்டுள்ள கம்பியை நேரடியாகப் பூமியுடன் இணைக்க வேண்டும். உயர்நிலப் பிரதேசம் மற்றும் திறந்தவெளியில் உள்ள உயர்ந்த மரங் களுக்குக் கீழுள்ள நிலத்தடிக்கு பாதுகாப்புத் தேடிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மின்னல் அடிக்கும் போது திறந்தவெளியில் நிற்காமல், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் மின்னல் அடிக்கும்போது, திறந்தவெளி வயல்கள், தேயிலைத் தோட்டம், விளையாட்டு மைதானம், கடற்கரை போன்ற இடங்களில் சுற்றித் திரிவதைத் தவிர்த்தல், விசேடமாக திறந்தவெளியில் இரும்பினால் தயாரிக்கப்பட்ட மண்வெட்டி, கத்தி போன்ற விலங்குகள் செல்லாத வகையில் பராமரிக்க வேண்டும். மின் கம்பத்தில் கயிறு கட்டி துணிகளை உலர்த்துவதை தவிர்க்க வேண்டும். மின்கம்பத்திலோ, அதை தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளை கட்டக் கூடாது. மின் கம்பங்களை பந்தல்களுக்கோ, விளம்பரப் பலகை வைக்கவோ பயன்படுத்தக் கூடாது. மழைக் காலங்களில் மின்மாற்றிகள், மின்கம்பங்கள், மின்பகிர்வு பெட்டிகள், புதைவடங்கள், இழுவை கம்பிகள் ஆகியவற்றின் அருகே செல்லக்கூடாது. மின் கம்பத்துக்காக போடப்பட்ட ஸ்டே வயரின் மீது அல்லது மின்கம்பத்தில் கயிறு கட்டி துணிகளை காய போடக்கூடாது. மேலும் மின்கம்பிகள் எங்காவது அறுந்து கிடந்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட மின்வாரிய அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். தாங்களாகவே மின்கம்பிகளை அப்புறப்படுத்த கூடாது. ஏனெனில் அப்போது மின்சாரம் அந்த மின்கம்பிகளில் இருந்தால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. மரக்கிளைகளை மின்கம்பிகள் தொடும்வரை வளர விடக்கூடாது. மேலும் கொடிகளை மின்கம்பத்தின் அருகில் வளர்க்க கூடாது. மேல்நிலை கம்பிகளுக்கு (Over head line) அருகே போதுமான இடைவெளி விட்டு கட்டிடங்களை கட்ட வேண்டும். வீட்டிற்கும் வீட்டிற்கு அருகாமையில் உள்ள மரங்களுக்கும் இடையில் மின்சாரம் பாயக் கூடிய வயர்கள் இணைக்கப்பட்டிருந்தால் அத்தொடர் புகளைத் துண்டிக்க வேண்டும்..

ஐ.எஸ்.ஐ. (ISI) முத்திரை பெற்ற தரமான மின்சாதனங்களையும் மின் ஒயர்களையும் உபயோகிக்க வேண்டும். மின் வேலைகளை தகுதி வாய்ந்த அனுபவமுள்ள எலக்ட்ரிசியன் களை கொண்டு செய்ய வேண்டும். மின் சாக்கெட்டுகளுக்கு கண்ட்ரோல் சுவிட்சு வைக்க வேண்டும். மின் பிளக்குகள் பொருத்தும் போதும் விலக்கும் போதும் கண்ட்ரோல் சுவிட்சுகளை முதலில் அணைக்க வேண்டும். ஈரக்கைகளால் சுவிட்சு களை தொடக்கூடாது. மின் பிளக்குகளை எடுக்க ஒயர்களை பிடித்து இழுக்கக் கூடாது.பழுதடைந்த சுவிட்சுகள், மின் பிளக்குகள் போன்றவற்றை உடனே மாற்ற வேண்டும். ப்ரிட்ஜ், கிரைண்டர், மிக்சி போன்ற சாதனங்களை உபயோகிக்க எர்த் அமைப்புள்ள மூன்று பின் சாக்கெட்டு உள்ள மின் பிளக்குகளையே பயன்படுத்த வேண்டும். ஈ.எல்.சி.பி (ஸிலிசிஙி)யை வீடுகளில் மெயின் சுவிட்சு போர்டில் பொருத்தினால் மின் கசிவால் ஏற்படும் ஆபத்துகளை தவிர்க்கலாம். மின் சாதனங்கள், சுவிட்சுகள் , சாக்கெட்டுகள் ஆகியவற்றை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் அமைக்க வேண்டும். ஆபத்துகளை தவிர்க்க Shuttering அமைப்புள்ள சாக்கெட்டு களையே உபயோகிக்க வேண்டும். பல பிளக்குகளை ஒரே சாக்கெட்டில் அமைப்பதை தவிர்க்க வேண்டும். உடைந்த சுவிட்சுகளையும், பிளக்குகளையும் உடனே மாற்றி விடுங்கள். பழுதுபட்ட மின்சார சாதனங்களை உபயோகிக்காதீர்கள். குளியலறையிலும் கழிப்பறையிலும் ஈரமான இடங்களிலும் சுவிட்சுகளைப் பொருத்தாதீர்கள். சுவற்றின் உள் பகுதியில் மின்சாரத்தை எடுத்துச் செல்லும் வயர்களுடன் கூடிய பி.வி.சி. பைப்புகள் பதிக்கப்பட்டிருந்தால் அப்பகுதிகளில் ஆணி அடிப்பதை தவிர்க்கவும். அவசர நேரங்களில் மின் இணைப்பினை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகளின் சுவிட்சுகள் ,மெயின் சுவிட்சுகள் இருப்பிடம் அமைய வேண்டும். மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில், சுவிட்சை ஆப் செய்து வைக்கவும்.


## மித்ரா டைம்ஸ்

**விளம்பரக் கட்டணம்.**

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

தொடர்புக்கு

044-23743007
044-23744661

# கிங் மேக்கர்



**காமராஜர்**



தீரர் சத்தியமூர்த்தி

காமராஜர் பெயர் காரணம் குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்மாளுக்கு மகனாக பிறந்தார்

காமராஜர். இவர்களது குல தெய்வமான காமாட்சி யின் பெயரையே இவருக்கு "காமாட்சி" என்ற பெயராக வைத்தனர். சிவகாமி அம்மாள் இவரை எப்போதும் ராசா என்று தான் அழைப்பார், இந்த பெயரே காலப்போக்கில் மருவி காமராசு என்று ஆனது.

**கல்வி கண் திறந்தவர்**

கல்வி நிலை இவர் சத்ரிய வித்யா சாலா பள்ளியில் படித்து வந்தார், குடும்ப சூழல் காரணத்தினால் இவரால் படிப்பை தொடர முடியாமல் போனது. அதனால், இவரது தாய் மாமன் வைத்திருந்த துணிக்கடையில் வேலைக்கு அமர்ந்தார்.

துணிக்கடையில் இருந்து அரசியல் தாய் மாமாவின் துணிக்கடையில் வேலை செய்துக் கொண்டிருந்த போது, பெ.வரதராஜுலு நாயுடு போன்ற தேச தலைவர்களின் பேச்சில் ஈர்ப்பு ஏற்பட்டு அரசியலிலும், சுதந்திர போராட்டங்களிலும் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

**16வயதில் காங்கிரஸ் உறுப்பினர்**

தனது 16வது அகவையில் தேசிய காங்கிரஸ் கட்சியில் தன்னை உறுப்பினராக சேர்த்துக் கொண்டார். வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாக்கிரக போராட்டத்திலும் கலந்து கொண்டார்



காமராஜர். இதற்காக கைது செய்யப்பட்டு கல்கத்தா சிறைக்கு சென்றார் காமாராஜர். 1940இல் கைதாகி வேலூர் சிறைக்கும், 1942 இல் ஆகஸ்ட் புரட்சி நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும் பெற்றிருக்கிறார் காமாராஜர்.

**காமராஜரின் அரசியல் குரு**

சிறந்த பேச்சாளாரும், நாடாளுமன்ற வாதியுமான சத்தியமூர்த்தி அவர்களை தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார் காமாராஜார். 1936இல் சத்தியமூர்த்தி அவர்கள்



பிரதேச காங்கிரசின் தலைவரான போது, காமராஜர் ஐயா அவர்களை செயலாளர் பொறுப்பில் அமர்த்தினார்.

**குறைந்த அமைச்சர்கள்**

காமாராசரின் அமைச்சரவையில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் அமைச்சர்கள் இருந்தனர். மொத்தம் 8 பேர் கொண்ட அமைச்சரவை தான் காமாராஜர் ஐயா அமைத்திருந்தார்.

போட்டியாளர்களுக்கும் அமைச்சர் பதவி தந்தவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி.சுப்பிரமணியம், அவரை முன்மொழிந்த எம். பக்தவத்சலம் ஆகிய இருவரையுமே தனது அமைச்சரவையில் சேர்த்திருந்தார காமராஜர் ஐயா அவர்கள்.

காமராஜர் அவர்களின் அமைச்சரவையின் குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது, தாழ்த்தப்பட்டோர் நலம் மற்றும் அறநிலையத் துறை. இதன் அமைச்சராக பி.பரமேசுவரன் என்கிற அமைச்சர் அமர்த்தப்பட்டிருந்தார். மதிய உணவு திட்டம் காமராஜர் ஐயா கல்வியின் நிலையை உயர்த்த நிறைய உழைத்தார். பள்ளிகள் தொடங்கப்பட்டும் கூட மாணாவர்கள் படிக்க வரவில்லை. காரணம் வீட்டின் நிலை கருதி நிறைய குழந்தைகள் வேலைக்கு சென்றுக் கொண்டிருந்தனர்.

எனவே, முதலில் அவர்களது பசியை போக்க வேண்டும் என்பதற்காக மதிய உணவு திட்டம் கொண்டுவந்து. குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வந்தார் காமராஜர். இதுவே, பின்னாளில் எம்.ஜி.ஆர். அவர்களால் சத்துணவு திட்டம் என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**கல்வியில் முன்னேற்றம்**



ஆங்கிலேயர்கள் காலத்தில் படித்தவர் களின் விழுக்காடு வெறும் 7% தான் இருந்தது, இதை 37%மாக உயர்த்தினார் காமராஜர். 180 நாட்களாக இருந்த பள்ளி வேலை நாட்களை 200 நாட்களாக மாற்றினார். சென்னையில் இந்திய தொழில்நுட்ப கல்லூரி (I.I.T) தொடங்கவும் காரணமாக இருந்தார்.

# கல்வி கண் திறந்தார் காமராஜர் அன்று மதுகடைகளை திறந்த அஞ்சலி செலுத்துகிறோம் இன்று.

காமராஜர் ஐயா அவர்களின் காலத்தில் தொடங்கப்பட்ட பொதுப்பணி நிறுவனங்கள் பாரத மிகு மின் நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், மணலி சென்னை சுத்திகரிப்பு நிலையம் (MRL இதன் தற்போதைய பெயர் CPCL) இரயில்பெட்டி இணைப்புத் தொழிற்சாலை (மிசிதி), நீலகிரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை, கிண்டி மருத்துவ சோதனைக் கருவிகள் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை, குந்தா மின் திட்டமும், நெய்வேலி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களின் வெப்ப மின் திட்டங்களும் காமராஜர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டவை தான்.



**தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக மாற்றிய காமராஜர்.**

தேர்தலில் தோல்வி 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தமது சொந்த ஊரான விருதுநகர் தொகுதியில் பெ. சீனிவாசன் என்பவரால் 1,285 வாக்குகள் வேறுபாட்டில் தோற்கடிக்கப்பட்டார். நாகர்கோயில் மக்களவைத் தொகுதியில் 1969 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார்

**காமராஜர் திட்டம்**

மூன்று முறை (195457, 195762, 196263) முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த காமராஜர். முதல்வர் பணியை விட தேசியப் பணியே முக்கியம் என தனது முதல்வர் பதவியை விலகல் செய்து பக்தவச்சலம் அவர்களிடம் கொடுத்துவிட்டு டெல்லி சென்றார், அங்கு நேருவின் அனுமதியோடு காமராஜர் திட்டம் (K-Plan) மற்றும் இந்திய தேசிய தலைவராக உதயமானார் காமராஜர்.

**"கிங் மேக்கர்"**

காமராஜர் நேருவின் மறைவிற்கு பிறகு, இந்திய பிரதமர்களாக லால் பகதூர் சாஸ்திரி அவர் களையும், ஐவரும் இறந்த பிறகு இந்திரா காந்தியையும் பதவியில் அமர்த்தியவர் காமராஜர். இதனால் தான் "கிங் மேக்கர்" என்று அழைக்கப்பட்டார் காமராஜர்.

**கட்சிக்குள் பூசல்**

ஒருசில உட்கட்சி பூசல் களினால், மீண்டும் தமிழக அளவிற்குள் தனது அரசியல் வாழ்க்கையை சுருக்கிக் கொண்டார் காமராஜர்.

**நினைவு சின்னங்கள்**

தமிழ்நாடு அரசு, காமராசர் நினைவைப் போற்றும் வகையில் சென்னை கிண்டியில் நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது. இங்கு காமராசரின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் காமராசர் மணி மண்டபம் ஒன்றையும் அமைத்துள்ளது.

இங்கு காமராசரின் மார்பளவு சிலையும் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் பொது மக்கள் பார்வைக்கு கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

# அவசியமா?

அக்காலத்தில் போர் வீரர்கள்தான் போரின்போது தலை தப்ப தலைக்கவசம் அணிந்து கொள்வார்கள். இக்காலத்தில் தலை தப்ப இருசக்கர வாகன ஓட்டிகள் தலைகவசம் எனப்படும் ஹெல்மெட் அணிவது அவசியமா கிறது. ஹெல்மெட் தேவையில்லாதது என்ற கூறுவோர் சொல்லும் காரணங்கள் பார்வை தடைபடுகிறது., பின்வரும் வாகனங்கள்



எழுப்பும் ஒலி கேட்பதில்லை. முடி கொட்டு கிறது. என்று பல காரணங்கள் சொல்வார்கள்.

தலைக்கவசம் கண்டுபிடிக்கப்பட்டு (தற்கால ஹெல்மெட்) 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. போட்டார் பந்தய வீரர்கள் அதிவேகமாக ஓட்டும் போது கீழே விழுந்தால் தலையில் அடிப்பட்டு கோமா நிலையில் செல்லு மளவிற்கு தலைகவசம் ஏற்படுவது சாதாரண நிகழ்வாக இருந்தது. இதனால் உயிரிழப்பும் ஏற்பட்டது. இதற்கு தீர்வு காண டாக்டர் எரிக்கார்ட்னர் என்பவரின் ஆலோசனைப்படி மோசஸ் என்ற டிசைனர் உறுதியான இலகுவான தலைக்கவசம் தயாரிக்கப்பட்டது. இந்த நிலையில் தான் மோட்டார் சைக்கிள் பந்தய வீரர்களுக்கு தலைக்கவசம் கட்டாயமாக்கப்பட்டது. ஆரம்பத்தில் பலத்த எதிர்ப்பு இருந்தாலும் தலைக்கவசம் அணிந்த பின் தலையில் காயம் ஏற்பட்டு மரணிப்பது மிகவும் குறைந்துபோனது. இதனால் மேலை நாடுகளில் தலைக்கவசம் பிரபலமானது.

பிற வாகனங்களில் செல்பவர்களை விட இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் விபத்தில் சிக்குவது அதிகம். எனவே, தலைக்கவசம் அணிந்திருந்தால் விபத்தின்போது தலையில் அடிப்படாமல் உயிர் தேசம் தடுக்கப்படுகிறது. தலையில் ஏற்படும் பெரிய அளவிலான காயங்கள் 6.9 சதவீதமும் மரணத்தை 42 சதவீதமும் தலைக்கவசம் குறைக்கிறது என்ற ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**அக்கறை யாருக்கு**

ஹெல்மெட் அணிவதன் அவசியம் உடையவனுக்கு அதிகம் வேண்டுமா?, அல்லது அவரின் குடும்பத்தாருக்கு அதிகம் இருக்க வேண்டுமா? அல்லது அரசங்கத்திற்கு அதிகம் இருக்க வேண்டுமா? உண்மையில் இந்த மூன்று பேருக்குமே அதிக அக்கறை இருக்க வேண்டும். அதுதான் ஆரோக்கியமான நிலை.

ஆனால் கட்டாய ஹெல்மெட் சட்டம் விஷயத்தில் அரசாங்கம் மட்டும் தான் வாகன ஓட்டிகளின் உயிப்மேல் அதிக அக்கறை கொண்டுள்ளதான தோற்றத்தை அல்லவா ஏற்படுத்தி உள்ளது.

வாகன ஓட்டிகள், ஹெல்மெட் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை அணிய வேண்டும். சட்டத்திறகு பயந்து அணிவர்கள் தொடர்ந்து ஹெல்மெட் அணியும் பழக்கத்தை கடைபிடிக்க போவதில்லை. நாளடைவில் சட்டமும் வலுவிழந்து பயனற்று போய்விடும்.

இதற்கு முன்பு இதே சட்டம் எத்தனை தடவை அமுலுக்கு வந்து பின் காணாமல் போய் உள்ளது. உண்மையான நிரந்தரமான மாற்றம் ஏற்பட வேண்டுமானால், எந்த மாற்றத்தையும் உணர்ந்து ஏற்று கொண்டு பின் மாற வேண்டும்.

முதலில் உணரவேண்டுமானால் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஆகவே




விழிப்புணர்வு ஏற்பட அதற்கான முக்கியத்துவத்தை கொடுக்கவேண்டும்.

ஹெல்மெட் அணிந்து வாகனம் ஓட்டும்போது, அவருக்கு விபத்து நேரிட்டு அதனால் அவர் உயிரிழந்தாலோ, அல்லது உடல் உறுப்புகள் பாதிப்பு ஏற்பட்டாலோ இதற்கான இழப்பீட்டு தொகையையும், மருத்துவ செலவுகளையும் இன்சூரன்ஸ் கம்பெனி வழங்கும் என்று ஹெல்மெட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மையான அக்கறையுடன் காப்பீடு திட்டத்தை கொண்டு வந்தால் உயிர்களும், குடும்பங்களும் காப்பாற்றப்படுவது மட்டுமல்லாது நல்ல மாற்றத்தையும் காணலாம்.

ஹெல்மெட் இல்லாத வாகன ஓட்டிகளிடம் ரூ.500 அல்லது ரூ.1000 வாங்கிக் கொண்டு ஒரு நல்ல தரமான தலைக்கவசத்தை அவர்களிடம் கொடுத்து அணிய வைக்கலாம்.

இதனால் மறுமுறை அவர். நிச்சயம் தலைக்கவசம் இல்லாமல் வரமாட்டார். அப்படியே வந்தாலும் மறுபடியும் அவர் களிடம் பணம் வாங்கி இரண்டாவதாகவும் தலைக்கவசம் கொடுக்கலாம்.

மூன்றாவது தடவையும் தலைக்கவசம் இல்லாமல் வருவார்களா? அட அப்படியும் தலைக்கவசம் இல்லாமல் வரட்டுமே. எத்தனை தடவை தலைக்கவசம் இல்லாமல் வந்தாலும் அத்தனை தடவையும் பணத்தை வாங்கிக் கொண்டு தலைக்கவசம் கொடுக்கலாமே? நிச்சயம் மறுபடி மறுபடி வர மாட்டார். ஏனென்றால் எத்தனை தலை கவசம் தான் அவர்கள் வாங்குவார்கள்.

இதனால் வீட்டைவிட்டு வெளியே கிளம்பும் போது யாரும் ஹெல்மெட் எடுக்க தவற மாட்டார்கள். அணிபவர்கள் எடுக்க மறந்தாலும் குடும்பத்தினர் மறக்காமல் எடுத்து கொடுப்பார்கள்.

இவ்விழிப்புணர்வு அனைவருக்கும் வந்து விட்டால் சட்டம் தன் கடமையை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவரவர்கள் தங்களது கடமைகளை சிறப்பாக செய்வார்கள்.


இவற்றையெல்லாம் கூறுவது, உங்களைப் பயமுறுத்துவதற்காக அல்ல; மாறாக ஹெல்மெட்டால் நமக்கு ஏற்படும் அனுகூலங்களைச் சுட்டிக்காட்டுவதற்கே.

**நல்ல மாற்றம் ஏற்படும் என நம்புவோம்.**

**நம்பிக்கையே நல்ல மாற்றம் தரும்.**

**நல்ல மாற்றம் நல்வாழ்வு தரும்.**

# The mind of a teacher




"Growth of human being is incomplete without teachers"

"Wisdom cannot be imparted. Wisdom that a wise man attempts to impart always sounds like foolishness to someone else ... Knowledge can be communicated, but not wisdom. One can find it, live it, do wonders through it, but one cannot communicate and teach it."

Teaching is not only a job, but a profession of service. If teachers feel happy and satisfied with themselves, then the passion and vitality in teaching can remain alive. Awareness on their part of importance in the students' life can taken the students a very long way.

The journey of a teacher as a role model begins with students emulating his / her external characteristics, behaviour and teaching methods. The teachers have lot of responsibilities on their shoulders. Each and every behaviour of the teacher will hold some meaning for the child to react.

Every teacher already has a counselor in him/ her they are quite skilled in understanding the classroom situation by identifying the strengths & weaknesses of each student. The teacher can also understand the child's behavioural aspect and the reason behind it; takes initiative to solve the problem by counseling both the student and the parent.




A teacher has a special role to play when trying to maximize the learning potential for students with special needs:

♦ Tar getting a few learning goals per day and observe the students on a daily basis for goal attainment.

♦ Facilitating learning by encouraging prompting, interacting and probing in the good questioning techniques.

♦ Creating a welcoming environment and providing students with as many opportunities as possible to learn, share and engage in all classroom activities.

♦ Planning carefully the physical space of the classroom which strongly supports an inclusive learning environment.

A consistent teacher is the same person at all times and in all situations. The teacher can create the right ambience in his / her classroom to make teaching and learning a rewarding exercise.

Education is a shared commitment between dedicated teachers, motivated students and enthusiastic parents. Every teacher should believe and execute few pointers in his / her classroom to take students along with him/ her.

1. <u>Sense of humour</u> : This is an essential quality of a successful teacher which makes a serious difference in the workplace, and all areas of life
2. <u>Positive attitude</u>: This is a greatest asset of life since the mind is both invisible and intangible; it is easier to see the accurate characteristics of the mind through a person's words, deeds & posture. A positive attitude will help the teacher cope with the situations in the best possible way.
3. <u>High expectations</u>: This is the key indicator to success. An effective teacher with high expectations wills strive to raise the bar for his/ her student.
4. <u>Consistency:</u> Consistency will make life easier for both the students and the teachers by knowing what is happening and what to expect. This will create a safe learning environment which will make them more likely to succeed.
5. <u>Fairness:</u> Fairness in teachers will enhance to treat all with honesty& respect, equal opportunities by encouraging cooperation & collaboration, uniqueness & values of everyone and no one is treated badly.
6. <u>Flexibility</u>: This will helps to take control of any situation where individual differences are understood and appreciated, mistakes are tolerated, and communication is transparent.
7. <u>Autonomy in the classroom</u>: Teaching is the only profession that gives room to teachers to be creative and autonomous each day which motivates the teacher to be effective by promoting active learning.

Every teacher should be generous enough to dedicate his/her life to educate each and every student. A teacher should,

Encourage the students to set personal learning/performance goals related to the overall desired results.

Give students appropriate choices over the processes of learning (for example, working in groups versus working alone) and their products (for example, visual, verbal, written).

Expect students to regularly self-assess their work and their progress toward explicit goals.

Teach facilitation skills and allot time for students to apply them (for example, via student-led seminars or problem-solving groups).

Teach basic manners, etiquettes, social behavior and individual learning skills

Teach and develop the good qualities and strive to make learners autonomous thus making self- assessment and self- adjustment.




Be inspirational, to generate excitement and curiosity for learning.

Design learning experiences that help students understand the concepts and own the knowledge they construct.

**Umadevi Duraisamy**
Coimbatore.



# BUYING FLATS AND PROPERTIES

## -valuable tips

In today's high prices in real estate market it is impossible for the common man to buy a plot and construct his dream house. The other alternative is buying a flat as per his budget. But buying flats is riddle with many problems as there are a number of builders in the field who do not follow the strict norms laid down by the Government authorities. In many of the case they violate the building norms and conceal the facts from the gullible buyer while selling the flats.

The following tips have to be considered before buying flats.

A flat means self contained premises used or entitled to be used for the purpose of residence or office, show room or shop or godown or for carrying on any other business and include garage or premises, which forms part of the building and includes an apartments.

Carpet Area- This is the area of the apartment building, which does not include the area of the walls.

Built up area- This includes the area of the walls also.

Super built up area- This includes the built up areas along with the area under common spaces such as lobby, lifts, stair etc. This term is applicably only in the case of multi dwelling units. Documents to be verified before purchase of a flat.

You have to have a title and document search conducted by an advocate having good experience in property matters. You cannot do if yourself as it involves lot of intricacies with regard to legal matters. It is a professional job to be done with professional expertise. However you have must know about the following points before buying any flats.

Check the back ground and reputation of the builder.

You may consider a new building's project only if its on superior location with good specifications and attractive pricing.

With established developers you can visit their existing projects and see that they have delivered in the past but with new ones at least fine out about the financial strength of the group and enquire if their ventures have been successful.

Fine out if the builder has deep pockets to whether a downswing in the sector or a financial set back.

Check the prices quoted and enquire from reputed property agents to verify.

Enquire about the earth quake resistant design of the building.

Check the sanction plan and ensure that the project has been fully approved by the competent authorities. Find out about the permitted coverage and the Floor Space index (F.S.I.) of the property.

Ensure that the builder has obtained a completion certificate or the occupancy certificate which is the proof of compliance with all local municipal regulations.

There should be construction defects that are detected later. Therefore make the builder give a guarantee against construction defects for at for the first year.

A little research/survey done before buying a flat will be very useful in preventing complications, litigations in the future.

**V.N.Prasad**
Advocate

# கேள்விகள் இங்கே! விடைகள்?

1. இந்தியாவில் வைரம் எங்கே கிடைக்கிறது?
2, ரயில் என்ஜின்கள் தயாரிக்கும் இடம் எது?
3, ஆசியாவிலேயே மிக உயிர்ந்த இராஜகோபுரம் எங்கே இருக்கிறது?
4 நேஷனல் கெமிக்கல் லேப் எங்குள்ளது?
5. இந்திய விமானப் படைத் தளபதி யார்?
6 கருப்பர்களின் உரிமைக்காகப் பாடுபட்ட அமெரிக்க நீக்ரோ யார்?
7. முதல் உலகத் தமிழ் மாநாடு எங்கு நடை பெற்றது?
8. தைவான் என்று இன்று வழங்கப்படும் நாட்டின் பழைய பெயரென்ன?
9. முதல் இந்தியப் பெண் மருத்தவர் யார்?
10, ராய்டர் எந்த நாட்டுச் செய்தி நிறுவனம்?



சரியான விடைகளை 20.08.2015க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.

**அனுப்ப வேண்டிய முகவரி**
*ஆசிரியர்*
**மித்ராடைம்ஸ்**
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094



# Best dental care & tips

-Dr.Rekha 7200011499

**what are the parts of a tooth?**

A tooth is made up of two parts: the crown and the root. The crown is what you see in your mouth and is above your gum line. The root is below the gum line.

**How long should i brush my teeth?**

Most people think they brush for at least a minute or two, but in reality they brush for 30 seconds or less. An effective brushing takes 2 – 3 minutes.

**I brush my teeth regularly but still have bad breath. what can i do?**

Gum disease is usually caused by a build-up of plaque, an invisible sticky layer of germs that forms naturally on the teeth and gums and is the reason for bad breath. Plaque can cause gums to become red, swollen and bleed easily. Untreated gum disease can become very serious, causing teeth to become loose or fall out.

**What is the best method of brushing?**

There are different methods of tooth brushing. The important thing to remember is that an effective brushing cleans every exposed tooth surface in a gentle, massaging motion (find more from your dentist).

**What will happan if i ignore getting my teeth cleaning?**

As the plaque and calculus accumulate, the periodontal disease continues. Bad breath often accompanies this condition. Once the bone that supports the teeth is lost, it will not regrow without surgical intervention.

**What is the relation between gum diesease and a diabetic?**

A diabetic patient's body does not respond as quickly to the infection as a non-diabetic. If the infection persists, it can spread to the underlying bone that supports the teeth.The research shows that diabetics who keep their condition under control and maintain good oral hygiene have a far better chance of combating infection than those who are not under control.

**When do i need a cosmetic dental treatment?**

Stained or discolored teeth, Fractured Teeth, Gaps between teeth, crooked teeth, hyper pigmentation of the gums, Cavities, Malaligned / Crowded Teeth&Malformed Teeth

**What is teeth whitening process?**

The chemical used for whitening penetrates into the tooth's dentin and enamel. It removes stains that have also penetrated into the tooth, as well as changes the colour of the inside of the tooth by an oxidation process.

**Are there any side effects or precautions?**

Yes, some people may have episodes of tooth sensitivity during treatment. These are generally mild, and will stop when treatment is completed. However, your dentist will determine the best wearing time to minimize sensitivity. There are also medications available that can be used to reduce sensitivity (find more from your dentist).



**How white will my teeth get?**

This depends on the nature of the staining and length of treatment. You may see up to 13 shades of color change.

**what is the cause of a tooth cavity?**

Bacteria – tiny colonies of living organisms are constantly on your teeth, gums, lips and tongue.If they are not removed, they multiply and grow in number until a colony forms on the tooth enamel. Proteins that are present in your saliva also mix in and the bacteria colony becomes a whitish film on the tooth. This film is called plaque, and it's what causes cavities.

**I have a number of black filling,Can i change them to white fillings?**



The black filling material used in your teeth is amalgam. White fillings more closely match the color of teeth than amalgam fillings, and require less drilling. This preserves the tooth structure more effectively.

**What are the dental treatments that can be conducted under laser?**

Caries detection, Caries removal, Cavity preparation, RCT, Gum surgeries, Removal of Oral lesions and malignancies, Teeth whitening, Removal of mouth ulcers,Gum contouring and during dental implant surgeries.

**How is laser treatment beneficial to me?**

They are:100% successful – It works in a predictable and precise manner, No bleeding, No swelling, Minimal Pain / discomfort, No anesthesia / Minimal anesthesia, No sutures, Post treatment complications are mostly negated

**What are braces?**

Teeth that are crooked or out of place (misaligned) affect the way a person chews and talks and how their smile looks.crooked teeth, are harder to clean& also can cause pain and discomfort. One method to correct this is to have Orthodontic treatment (braces) that works by exerting a gentle pressure over time to straighten teeth that are growing, or have already grown, out of place. Today there are braces that can be attached to the back of the teeth, or use transparent brackets (Lingual braces & INVISALIGN).

**What is root canal treatment?**

When a damage occurs to a tooth (often from a deep cavity or an injury that causes a tooth to crack) and the inside of the tooth becomes infected and left untreated, the damaged pulp can cause infection that will damage the bone around the tooth and cause swelling and pain. The treatment involves opening the tooth, removing the damaged pulp, cleaning, shaping, filling and sealing the tooth.

**why do i need X-Ray**

X-rays provide your dentist with an important diagnostic tool that shows the condition of your teeth, their roots, jaw placement and the overall composition of your facial bones, to determine the presence or degree of periodontal disease, abscesses and many abnormal growths, such as cysts and tumors. X-rays can also show the exact location of impacted teeth.

**what is a copmlete denture?**

A denture is a removable replacement for missing teeth and adjacent tissues. Complete dentures replace all the teeth. Complete dentures are either Conventional or Immediate.



**When should be my child first dental visit?**

Your child's first visit to a dentist should be by the age of two or three, when all the 20 baby teeth have come in. After the first visit, your child should see a pediatricdentist twice a year for regular cleaning and check-up, to detect any problems early and to prevent more serious problems in the future.

**How does fluoride work?**

Fluoride is a natural element that can be found in many things, like in the water we drink and the food we eat. Fluoride that is absorbed by your body is used by the cells that build your teeth to make stronger enamel. Topical fluoride – fluoride that is applied to the outside of the enamel.

OPS Precious Smiles
DENTAL CENTRE™
YOUR SMILE IS IMPORTANT TO US
T.NAGAR - K.K.NAGAR - ECR



# மனைவியிடம் கணவன் எதிர்பார்ப்பது என்ன ??

1. பள்ளி அலுவலக நேரம் தெரிந்து அதற்குமுன் தயாரித்தல்.
2. காலையில் ஆறு மணிக்கு முன் எழுந்திருத்தல்.
3. எப்போதும் சிரித்த முகம்.
4. நேரம் பாராது உபசரித்தல்.
5. மாமியாரை தாயாக மதிக்க வேண்டும்.
6. கணவன் வீட்டாரிடையே அனுசரித்துப் போக வேண்டும்.
7. எதற்கெடுத்தாலும் ஆண்களைக் குறை சொல்லக் கூடாது.
8. அதிகாரம் பணணக் கூடாது.
9. குடும்ப ஒற்றுமைக்கு உழைக்க வேண்டும். கணவன் உடன் பிறந்தவர்களிடம் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது.
10. கணவன் குறைகளை வெளியே சொல்லக்கூடாது. அன்பால் திருத்த வேண்டும்.
11. கணவனை சந்தேகப்படக் கூடாது.
12. குடும்பச் சிக்கல்களை வெளியே சொல்லக் கூடாது.
13. பக்கத்து வீடுகளில் அரட்டை அடிப்பதைக் குறைக்க வேண்டும்.
14. வீட்டுக்கு வந்தவுடன், சாப்பிடும் போது சிக்கல்கள் குறித்துப் பேசக் கூடாது.
15. கணவர் வழி உறவினர்களையும் நன்கு உபசரிக்க வேண்டும்.
16. இருப்பதில் திருப்தி அடைய வேண்டும்.
17. அளவுக்கு மீறிய ஆசை கூடாது.
18. குழந்தை படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.
19. கொடுக்கும் பணத்தில் சீராகக் குடும்பம் நடத்த வேண்டும்.
20. கணவரிடம் சொல்லாமல் கணவரின் சட்டைப் பையிலிருக்கும் பணத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.
21. தேவைகளை முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
22. எதிர்காலத் திட்டங்களைச் சிந்திக்கும் போது ஒத்துழைக்க வேண்டும்.
23. தினமும் நடந்ததை இரவில் சொல்ல வேண்டும்.
24. தாய் வீட்டில் கணவரை குற்றம் சொன்னால் மறுத்துப் பேச வேண்டும்
25. அடக்கம், பணிவு தேவை. கணவர் விருப்பத்துக்கு ஏற்றாற் போல் ஆடை, அலங்காரம் செய்ய வேண்டும்.
26. குழந்தையைக் கண்டிக்கும் போது எதிர்வாதம் கூடாது.
27. சுவையாகச் சமைத்து, அன்புடன் பரிமாற வேண்டும்.
28. கணவர் வீட்டுக்கு வரும் சிரித்த முகத்துடன் வரவேற்பதோடு வீட்டை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும்.
29. உரையாடலில் தெளிவாகப் பேசுவதுடன், பொருத்தமான முறையில் எடுத்துரைக்கும் விதமும் தெரிய வேண்டும்.
30. தேவையற்றதை வாங்கிப் பண முடக்கம் செய்யக் கூடாது.
31. அதிகம் சினிமா பார்க்கக் கூடாது.
32. உடற்பயிற்சி செய்து உடம்பை சிலிம் ஆகவைத்துக் கொள்ள வேண்டும்.
33. கணவருடன் செல்லும்போது கடை வீதிகளில் அதிக நேரம் அவர்களை காக்க வைக்க கூடாது
34, கணவனை புரிந்து நடந்துக் கொள்ளுதல் வேண்டும்.
35. கணவனின் இருப்பு தெரியாமல் நகைகளை வாங்கி குவிக்க கூடாது.
36. உறங்கப் போகும் நேரத்தில் பிரச்சனைகளை விவாதிக்க கூடாது.

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்


கணித்தவர்
**S.K.சுந்தரம்**

## மேஷம்



இந்த மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்த்தால் ராசி நாதனும் அஷ்டமாதிபனுமாகிய செவ்வாய் மாதக்கடைசியில் கடகத்தில் நீசனாகப் போகிறார். எனவே யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடுவதோ உத்தரவாதம் கொடுப்பதோ தர்மசங்கடத்தில் ஆழ்த்திவிடும். ஆனால் அஷ்டமாதிபன் செவ்வாய் நீசனாவது ஒரு விதத்தில் ராஜயோகமே. குருவின் சஞ்சாரம் பஞ்சமத்தில் அதாவது சிம்மத்தில் சஞ்சாரம் செய்வது. அதன் பார்வை முறையே ராசிக்குப் பாக்கியம். ராசிக்கு லாபம், மற்றும் ராசியைப் பார்ப்பதால் எதிர்பாராத திடீர் தனயோகம் உண்டாகி உங்களை திக்குமுக்காடச் செய்யும். பெரிய மனிதர், சான்றோர், ஞானிகள் சாதுக்கள் ஆகியோர் தரிசனம் ஏற்படும் ஏற்றமிகு எழுச்சியைக் காண வைக்கும். சனிபகவான் தூலத்தில் வக்கிரமாக செப்டம்பர் 4 வரை சஞ்சரிக்கிறார். ஆகவே சனிக்கிழமைகளில் ஆஞ்சனேயரைத் தரிசனம் செய்து அவர் காயத்ரியை உச்சரித்து வந்தால் எங்கும் எதிலும் வெற்றி நிச்சயம். அதிர்ஷ்ட கிழமை வியாழன் அதிர்ஷ்ட எண் 1 மற்றும் 3

## ரிஷபம்



ராசிநாதன் சுக்ரன் சதுர் கேந்திரத்தில் குருவுடன் சஞ்சாரம் செய்வது மிகப்பெரிய யோகமே. பொதுவாக பிராமணன் தனித்து இருந்தால் தொல்லை. ஆனால் இங்கு குரு, சுக்ரன் என்ற இரு பிராமணர்கள் சதுர்கேந்திரத்தில் சேர்ந்து இருப்பது ராஜயோகத்தை ஏற்படுத்தும் மேலும் குருவின் பார்வைகள் முறையே ராசிக்கு அஷ்டமனம் தசம கேந்திரம் மற்றும் விரையத்தில் பதிவதாலும் தனவரவுக்கு ஏற்ற சுப விரயங்களையும் கொடுக்கும். விரைவாயதிபன் செவ்வாய் தன ஸ்தானத்தில் அமர்ந்துள்ளதால் செலவுக்கு தகுந்த வருமானங் களையும் கொடுக்கும். இந்த ராசிக்கு சுகாதிபன் சூரியன் முறையே கடக மற்றும் சிம்மத்தில் ஆட்சி பெற்று சஞ்சரிக்கப்போவது ஒரு நல்ல நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும். வி.ஐ.பி. மற்றும் வி.வி.ஐ.பி. போன்ற பெரிய மனிதர்களின் சந்திப்புகள் அரசு மரியாதை, வெகுமதி சமுதாயத்தில் ஒரு நல்ல இடத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். ஸ்ரீரெங்கநாதரை வணங்கி வர சகல நன்மைகளும் கிடைக்கும். யோகமான தினங்கள் புதன் மற்றும், வெள்ளி, யோக எண்கள் : 5 மற்றும் 6

## மிதுனம்



ராசிநாதன் புதன் சிம்மம் மற்றும் கன்னியில் உச்சம்பெறக்கூடிய கால கட்டங்கள். ராசிநாதன் திருதிய ராசியில் சஞ்சரிப்பது ஒரு நல்ல யோகமே. செவ்வாய் இந்த ராசிக்கு 6 மற்றும் 11க்கு அதிபதி. 6க்கு அதிபதி நீசம் பெறுவது விபரீத ராஜயோகத்தை ஏற்படுத்தும். சூரியனின் சஞ்சாரம் இம்மாதங்களில் கடகம் மற்றும் சிம்மத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கப்போவது. மிதுனத்திற்கு சூரியன் சஞ்சாரம் சிம்மத்தில் அமைவது மிகவும் ஏற்ற மிகு காலமாக அமையும். குருவின் சஞ்சாரம் முறையே சிம்மத்தில் இருந்துகொண்டு தனுசு, கும்பம் மற்றும் மேஷத்தைப் பார்வையிடப் போகிறார். இது ராசிக்கு சப்தமம், பாக்கியம் மற்றும் லாபத்தை நோக்குமிடங்களாக அமைவதால் மனைவி, தந்தையார் மற்றும் வெளிநபர்கள் மூலம் தனப் பிராப்தி ஏற்படும். சனியின் சஞ்சாரம் ராசிக்கு அஷ்டம, பாக்கியாதிபன் செப்டம்பர் 4 வரை வக்கிரமாக அமைவதால் அகலக்கால் வைக்க வேண்டாம். லஷ்மி நரசிம்மரை வழிபட்டு வர சகல வெற்றிகளும் தேடிவரும். யோகமான எண்கள் 3 மற்றும் 6. யோகமான கிழமை வெள்ளி.

## கடகம்



இந்த மாதம் தினசரி அலுவல்களை சரியாக செய்து முடிப்பீர்கள். மாதத்தில் பாதிநாள் சூரியன் புதன் ஆகிய கிரகங்கள் உங்கள் ராசியிலும் பிற்பகுதி சிம்மதிலும் சஞ்சாரிக்கப்போவதால் தாராள தனவரவிற்கு இடமுண்டு. அரசு சம்மந்தப்பட்ட வேலைகளில் நல்ல ஈடுபாடும் அதன் மூலம் பொருள் சம்பாதிக்கும் யோகமும் உண்டாகும். இந்த ராசிக்கு பூர்வ புண்யாதிபதி அங்காரகன் பாதி நாட்கள் கடகத்தில் நீசமாகவும் பிற்பகுதி நட்பாகவும் சஞ்சாரிக்கப்போவதால் கட்டிடம் கட்டும் பணிகள் சற்று தாமதமடைந்தாலும் பிற்பகுதி விறு விறுப்பாக இருக்கும். புத்திரகாரகன் குருபகவன் உங்கள் ராசிக்கு குடும்ப ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்து அதனுடைய பார்வைகள் முறையே ரோகம். அஷ்டமனம், தொழில் ஸ்தானத்தில் பதிவதால் செய்யும் தொழிலில் முன்னேற்றம் கடன் ஸ்தானத்திலிருந்து நிவர்த்தி. ஆயுள் பலம் அதிகரிப்பு போன்றவை ஏற்படும். செப்டம்பர்4க்கு பிறகு சனி வக்கிரத்தின் நிவர்த்திக்குப் பிறகு பிரமிக்கத்தக்க மாறுதல் ஏற்படும். ராசியான கிழமை வியாழன் மற்றும் செவ்வாய், அதிர்ஷ்ட எண்கள் 3 மற்றும் 9 மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரை தினசரி கும்பிட்டுவர யோகங்கள் வந்து சேரும்



## சிம்மம்



மாத தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் ராசிக்கு 12ம் இடமான கடகத்தில் தனாதிபன் மற்றும் இலாபாதிபன் வித்யாகாரகன் புதன் சம்பந்தப்பட்டு விரைய ஸ்தானத்திலும் மாதத்தின் பிற்பகுதி உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப்படபோவதால் இது ஒரு யோக காலமென்றே சொல்லவேண்டும். மேலும் ராசிக்கு சுக மற்றும் பாக்கியாதிபன் அங்காரகன் கடகத்தில் நீசம் பெற்றும் பிற்பகுதி அங்கிருந்து பெயர்ந்து சிம்மத்திலேயே சஞ்சரிக்கப் போவதால் தடைப்பட்டகாரியங்களில் முன்னேற்றம் தெரியும். உங்களை விட்டு விலகி சென்றவர்கள் மனம் மாறி மறுபடியும் உங்கள் பக்கம் வந்து இணைவர். நட்பு வட்டம் விரிவடையும். புதிய தொழில் தொடங்க உற்சாகம் ஏற்படும். குருவின் சஞ்சாரம் ராசியிலேயே அமர்வதால் எதிலும் மனக்கசப்பு ஏற்படும். எனினும் அவர் பார்வை முறையே ராசிக்குப் பஞ்சமம், சப்தமம், மற்றும் பாக்கிய ஸ்தானத்தில் படுவதால் அந்த இடங்கள் சபீட்சமாக இருக்கும் சனியின் பார்வை முறையே ராசிக்கு ரோகம், ஜீவனம் மற்றும் ராசியிலேபடுவதால் சோம்பேறித்தனம் குடிகொள்ளும். யோகமான எண்கள் 1 மற்றும் 9, ராசியான கிழமைகள் ஞாயிறு மற்றும் செவ்வாய். திருத்தணி முருகனை வணங்கி வர பல நன்மைகள் வந்து சேரும்.

## கன்னி



மாதத் தொடக்கத்தில் ராசி நாதன் புதன் லாபம் மற்றும் விரையங்களில் சஞ்சரிக்கப்போவதால் இதை ஒரு யோக காலமென்றே சொல்ல வேண்டும். சூரிய சஞ்சாரம் ராசிக்கு லாபம் மற்றும் விரையஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதாலும் மேலும் விரைய ஸ்தானம் சூரியனுக்கு ஆட்சி பெற்ற வீடாக அமைவதாலும் அரசு சம்மந்தப்பட்ட காரியங்களில் லாபமும் மற்றும் நற்பெயரும் ஏற்படும். முக்கியப்பட்ட நபர்கள் பழக்கம் ஏற்படும். உங்கள் சொல்லுக்கு மக்கள் மத்தியில் நல்ல மரியாதை மதிப்பு ஏற்படும். செவ்வாயின் சஞ்சாரம் முறையே லாபத்தில் சஞ்சரிக்கப்போவதால் தடைப்பட்ட காரியங்கள் தானாகவே மீண்டும் அமைந்து வெற்றிப் பாதைக்கு வழிவகுக்கும். குருவின் பார்வை முறையே ராசிக்கு 4,6 மற்றம் 8ல் பதிவதால் அந்த இடங்கள் செழிப்படையும். சனியின் சஞ்சாரமும் ஏழரை சனியாக செப்டம்பர் 4 வரை அமைவதால் வியாழக் கிழமைகளில் குருபகவானையும் சனிக்கிழமைகளில் கால பைரவரையும் கும்பிட்டு வர நன்மைகள் நடக்கும். ராசியான கிழமை ஞாயிறு மற்றும் புதன் அதிர்ஷ்ட எண்கள் 1 மற்றும் 5. ஸ்ரீரெங்கநாதரை தினசரி வணங்கி வர நன்மைகள் ஏற்படும்.

## துலாம்



மாத ஆரம்பத்தில் சூரிய மற்றும் புதனின் சஞ்சாரம் ராசிக்கு தசம கேந்திரமான பத்திலும் பிற்பகுதி சூரியன் சிம்மத்தில் ஆட்சியும் மற்றும் புதன் இலாபத்திலும் சஞ்சரிக்கப் போவபதால் இது ஒரு பெரிய யோகமான காலம் என்றே சொல்ல வேண்டும். மேலும் நல்ல தசாபுத்தி நடப்பவர்களுக்கு இது ஒரு பொற்காலம் என்றே சொல்லவேண்டும். ராசிக்கு தன களத்திராதிபதி செவ்வாய் கடகத்தில் தசம சஞ்சாரமும் பின் லாப சஞ்சாரமும் செய்வதால் கடவுள் கிருபையால் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும் புத்திகாரகன் குரு இலாபத்தில் சஞ்சரிப்பதாலும் அதன் பார்வைகள் முறையே ராசிக்கு திருதிய பஞ்சம் மற்றும் களத்திர ஸ்தானங்களில் பதிவதால் சகோதர, சகோதரிகள் மற்றும் புத்திர புத்திரிகள் உறவு வலுப்படும். சனி சஞ்சாரம் செப்டம்பர் 4 முடிய ராசியிலும் பின்னர் ராசிக்கு குடும்ப ஸ்தானத்திற்கும் செல்வதால் சில தடங்கல் ஏற்படும். ராசியான கிழமை புதன் மற்றும் வியாழன். யோக எண்கள் 3 மற்றும் 5,. லஷ்மி நரசிம்மரை வணங்கி வர நல்ல முன்னேற்றம் எற்படும்.

## விருச்சிகம்



மாத ஆரம்பத்தில் ஜீவன ஸ்தானாதிபன் சூரியன் கடகத்தில் பகை பெற்றும் பின்பு தன் ஆட்சி வீட்டில் தசம கேந்திரத்தில் அமைகிறார். அஷ்டம, இலாபாதிபன் புதன் முறையே கடகம் மற்றும் சிம்மத்தில் சஞ்சாரம் செய்யப்போகிறார். அதேநேரம் ராசிநாதன் செவ்வாய் கடகத்தில் நீசனாவது அத்தனை நல்லதல்ல. இருப்பினும் ராசிநாதன் மற்றும் ரோகாதிபதினாக இருப்பதால் ரோகாதிபன் நீசம் பெறுவது ஒரு நல்ல யோகமே ஆகும். களத்திரகாரகன் சுக்கிரன் தசம கேந்திரத்தில் சஞ்சாரம் செய்வது சிறப்பு, மேலும் குருவின் சஞ்சாரம் முறையே ராசிக்கு தன மற்றம் சுக மற்றும் ரோகஸ்தானத்தில் படுவதாலும் திடீர் தன பிராப்தி ஏற்படுவதுடன் புதிய வண்டி வாகனங்கள் சேர்க்கை கடன் ஸ்தானத்தைப் பார்ப்பதால் பெரிய கடன்கள் உடனடியாக அடைந்து அதன் மூலம் மனத்திற்கு நிம்மதி கிடைக்கும் சனியின் சஞ்சாரம் ராசியிலேயே அமைந்து அதன் பார்வைகள் முறையே ராசிக்கு திருதிய, களத்திர மற்றும் ஜீவன ஸ்தானத்தில் பதிவதால் உடல் அசதி, ஞாபகமறதி போன்றவை ஏற்படும். ராசியான கிழமை ஞாயிறு மற்றும் செவ்வாய். யோக எண்கள் 1 மற்றும் 9 திருப்பரங்குன்ற முருகனை வள்ளி தெய்வானையுடன் வணங்கி வர நன்மைகள் மேலும் மேலும் தொடரும்.

## தனுசு



இந்த மாத தொடக்கத்தில் சூரிய மற்றும் புதன் ராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் அரசு சம்பந்தப்பட்ட வேலைகள் தாமதப்படுவதுடன் மனைவிக்கு உடல் நலம் பாதிப்பதற்கு சந்தர்ப்பம் உண்டு. ராசிக்கு பஞ்சமாதிபன் செவ்வாய் கடகத்தில் நீசம் பெற்று அதன் பார்வைகள் முறையே ராசிக்கு லாபம், தன மற்றும் திருதிய ஸ்தானத்தில் படுவதால் அந்த இடங்கள் சிறிது பாதிப்புகளை ஏற்படுத்தும். களத்திரகாரகன் சுக்கிரன் ராசிக்கு பாக்கியத்தில் ராசிநாதன் குருவுடன் சஞ்சரிப்பது பெரிய யோகமே. மேலும் ராசிநாதன் குரு 9ல் அமர்வதால் ஓடினவனுக்கு 9ல் குரு என்ற பழமொழி நல்லமுறையில் கை கொடுக்கும். குருவின் பார்வைகள் முறையே ராசிக்கு, ராசி திருதிய மற்றும் பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் அந்த இடங்கள் வலுப்படும். சனியின் சஞ்சாரம் செப்டம்பர் 4ம் தேதி வரை வக்கிரமாக இருப்பதாலும் பெரிய தொந்தரவுகள் ஏற்படாது. ராசியான நாட்கள் வியாழன் மற்றும் வெள்ளி. அதிர்ஷ்ட எண்கள் 3 மற்றும் 6 குருவையும் சுக்கிரனையும் கும்பிட்டு வர வளமான வாழ்க்கை அமையும்.

## மகரம்



இந்த மாத தொடக்கத்தில் சூரியன் மற்றும் செவ்வாய் உங்கள் ராசிக்கு சப்தம கேந்திரம் அதனுடன் புதனின் சஞ்சாரம் கடகத்தில் சூரியன் பகை, செவ்வாய் நீசம். இரண்டு பாபிகளும் ராசியைப் பார்ப்பதாலும் ஒத்த தலைவலியை ஏற்படுத்தும் மாத்ரு ஸ்தானாதிபன் செவ்வாய் நீச்சப்படுவதால் தாய்க்கு உடல் நிலையில் குறைபாடுகள் தொடரும். புதன் ராசிக்கு ரோக மற்றும் 9ம் அதிபதி. அவர் சஞ்சாரம் ராசிக்கு 7ல் அமைவது திடீர் தனப் பிராப்தியை ஏற்படுத்தும் களத்திரகாரன் சுக்ரன் மற்றும் புத்திகாரகன் குரு ஆகியோர் ராசிக்க அஷ்டமத்தில் சஞ்சரிப்பது விசேஷமல்ல குரு ராசிக்கு விரையம், தனம் மற்றும் சுகஸ்தானத்தில் விழுவதால் குடும்பத்தில் சுப செலவுகள் ஏற்படும். யாரையும் பற்றி விமர்சித்தால் பொல்லாப்புகள் வந்து குடியேறும் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் வம்பு வழக்குகள் ஏற்பட்டு வாயிற்கதவை தட்டும். என்னதான் திட்டமிட்டாலும் செய்யும் காரியங்களில் தொய்வு ஏற்பட்டு அதன் மூலம் மனக்கசப்புகள் தோன்றும். பிற்பகுதியில் புதனின் சஞ்சாரம் நன்மை செய்யும். செப்டம்பர் 4, சனி வக்ர நிவர்த்திக்குப்பின் நன்மை நடக்கும். யோகமான எண்கள் 5 மற்றும் 6. ராசியான கிழமை புதன். தினசரி அனுமனைக் கும்பிட நல்லவை தொடர்ந்து வரும்

## கும்பம்



இந்த மாத தொடக்கத்தில் ராசி நாதன் செப்டம்பர் 4 தேி வரை வக்ர நிலையில் சஞ்சாரம் செய்து அதன் பார்வை முறையே ராசிக்கு லாபம், சுகம் மற்றும் களத்திரஸ்தானத்தை பார்வையிடுவது அத்தனை உசிதமல்ல. சூரியனின் சஞ்சாரம் மாதத் தொடக்கத்தில் ராசிக்கு 6ம் இடமான கடகத்திலும் பின்னர் ராசிக்கு சப்தமஸ்தானமான சிம்மமத்தில் ஆட்சி பெற்றும் வரப்போவதால் இது ஒரு நல்ல கால கட்டங்கள் என்றே செல்ல வேண்டும். அங்காரகன் இந்த ராசிக்கு திருதிய மற்றும் ஜீவனாதிபன். மாதத் தொடக்கத்தில் கடகத்தில் அவர் நீசனவதாலும் ஜீனாதிபன் கெட்டுப்போவதாலும் சகோதர சகோதரிகள் ஒற்றுமைக்குப் பங்கம், தொழிற் ஸ்தானத்தில் போட்டி பொறாமை ஏற்பட்டு தொழிற் சுணக்கம் ஏற்படும். புதனின் சஞ்சாரம் ராசிக்கு 6 மற்றும் 7ல் அமைவது விசேஷம். ஆகவே குழந்தைகள் வகையில் முன்னேற்றம். மனைவி மூலம் நல்ல யோகமான வாய்ப்புகள் ஏற்பட சந்தர்ப்பமுண்டு. குரு மற்றும் சுக்கிர சஞ்சாரம் ராசிக்கு சப்த ஸ்தானத்தில் அமைவதும் குருவின் பார்வை முறையே ராசிக்கு லாபம் ராசி மற்றும் திருதிய ஸ்தானத்தைப் பார்ப்பது சிறப்பு. யோகமான எணகள் 3 மற்றும் 5 ராசியான கிழமைகள் புதன் மற்றம் வியாழன். ஆதிபராசக்தியைத் தொழுது வர பல நன்மைகள் ஏற்படும்

## மீனம்



இந்த மாத தொடக்கத்தில் சூரியன் செவ்வாய் மற்றும் புதன் கடத்தில் பஞ்சமத்தில் சஞ்சரிப்பதும் பின்னர் சூரியன் ஆட்சி பெற்று சிம்மத்தில் சஞ்சாரம் செய்கிறார். அங்காரகன் தன மற்றும் பாக்கியாதிபன். அவர் கடகத்தில் நீச்சம் பெற்று முறையே ராசிக்கு அஷ்டமனம், லாபம் மற்றம் விரையத்தைப் பார்ப்பது நல்லதல்ல. புதனின் சஞ்சாரம் பஞ்சமம் மற்றும் ரோகம். களத்திரகாரன் சுக்ரன் ரோகத்தில் ராசிநாதன் குருவுடன் அமர்வது விசேஷமல்ல. எனினும் குருபார்வை முறையே ராசிக்கு பத்து, விரையம், தனஸ்தானத்தில் விழுவதால் திடீர் தனபிராப்தி எற்படும். செப்டம்பர் 4, வரை சனியின் அஷ்டம சஞ்சாரம் கொடுமையானது சனி முறையே ஜீவனம், தனம் மற்றும் ரோகஸ்தானத்தை பார்வையிடுவதால் தொழில் சரிவு, உடல் நோய் வாய்ப்படுவது போன்ற பிரச்சனைகள் சஞ்சரிக்கும் ராசியான எண்கள் 1 மற்றும் 5 ராசியான கிழமை ஞாயிறு புதன் தினசரி குரு மற்றும் சனியை கும்பிட்டு வரவும் குரு ராகவேந்திரை தியானிப்பதன் மூலம் அமைதி ஏற்படும்